


admin@dhinakani.com

RNI-TNTAM/2023/88253

நமது தினகனி

NAMADHU DHINA KANI

www.dhinakani.com

காலை நாளிதழ்




Vol: 03 | Issue: 110 | 4 Pages | 19.11.2025 | Wednesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825

மலர்: 03 | இதழ்: 110 | 4 பக்கங்கள் | 19.11.2025 | புதன்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825



**நிலத்தியல்பான் நீர்திரிந் தற்றாகும் மாந்தர்க்**
**கினத்தியல்ப தாகும் அறிவு**

**விளக்கம்: சேர்ந்த நிலத்தின் இயல்பால் அந்த நீர் வேறுபட்டு அந் நிலத்தின் தன்மையுடையதாகும், அதுபோல் மக்களுடைய அறிவு இனத்தின் இயல்பினை உடையதாகும்.**

# சவுதி விபத்தில் 42 இந்தியர்கள் பலியான சம்பவம் அதிர்ச்சியளிக்கிறது: முதல்வர்

துபாய், நவ.19

சவுதி அரேபியாவில் பேருந்து விபத்துக்குள்ளானதில் 42 இந்தியர்கள் உயிரிழந்தனர். அவர்களில் பலர் இந்தியாவின் தெலுங்கானா மாநிலத்தில் இருந்து சென்றவர்கள் என்பதும், அனைவரும் சவுதி அரேபியாவின் மெக்கா நகரில் இருந்து மெதினா நோக்கி உம்ரா புனித பயணம் மேற்கொண்டவர்கள் என்பதும் தெரியவந்துள்ளது. உயிரிழந்தவர்களின் குடும்பத்துக்கு இந்திய அரசியல் தலைவர்கள் இரங்கல் தெரிவித்து வருகின்றனர்.

இந்த நிலையில், இந்த விபத்து தொடர்பாக முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டு இருப்பதாவது;



”மதீனா அருகே நடந்த துயரமான பேருந்து விபத்தில் பல இந்திய உம்ரா யாத்ரீகர்கள் உயிரிழந்த சம்பவம் மிகுந்த அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இந்த துயரமான நேரத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன். காயமடைந்தவர்கள், தேவையான மருத்துவசிகிச்சைபெற்றுவிரைவில் குணமடைவார் என்று நம்புகிறேன்.” இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அடிப்படை வசதிகள் கோரி பிரதமர் மோடிக்கு கடிதம் எழுதிய சிறுவன்



பெங்களூரு, நவ.19

கர்நாடக மாநிலம் கதக் மாவட்டம் பெட்டகேரி கிராமத்தில் வசித்து வரும் சிறுவன் சாய்ராம். இவன் அப்பகுதியில் உள்ள ஒரு பள்ளியில் 8ம் வகுப்பு படித்து வருகிறான். இந்த நிலையில் பெட்டகேரி கிராமத்தில் அடிப்படை வசதிகள் சரியாக இல்லாமல் கிராம மக்கள் பல ஆண்டுகளாக சிரமப்பட்டு வருகின்றனர்.

இந்த நிலையை மாற்ற நினைத்த சிறுவன் சாய்ராம், பிரதமர் நரேந்திர மோடிக்கு கடிதம் ஒன்று எழுதியுள்ளான். அதில், ‘எங்கள் பெட்டகேரி கிராமத்தில் பல ஆண்டுகளாக சாலை வசதி இல்லை, மழை நேரங்களில் சாலை முழுவதும் சேறும், சகதியுமாக காணப்படுகிறது.

மேலும் நாங்கள்(கிராமத்தில் உள்ள மாணவமாணவிகள்) பள்ளி முடிந்து வந்ததும் அந்த சேற்றில் தான் விளையாடும் நிலை உள்ளது. குடிநீர் சரியாக கிடைப்பதில்லை. எனவே எங்கள் கிராமத்தில் அடிப்படை வசதிகளை செய்து தர வேண்டும்’ என்று எழுதி உள்ளான். சிறுவனின் செயலை பலரும் பாராட்டி வருகிறார்கள்.

## அடிப்படை வசதிகள் கோரி பிரதமர் மோடிக்கு கடிதம் எழுதிய சிறுவன்



பெங்களூரு, நவ.19

காவிரி ஆற்றின் குறுக்கே ராமநகர் மாவட்டம் கனகபுரா தாலுகாவில் உள்ள மேகதாது என்ற பகுதியில் ரூ.14 ஆயிரம் கோடியில் புதிய அணை கட்ட கர்நாடக அரசு தீர்மானித்துள்ளது. இதற்கு தமிழக அரசு கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகிறது.

கர்நாடக அரசின் திட்ட அறிக்கைக்கு தடை விதிக்க கோரிய தமிழகத்தின் மனுவை சுப்ரீம் கோர்ட்டு தள்ளுபடி செய்துள்ளது. மேலும் இந்த திட்டத்திற்கான விரிவான அறிக்கை தயாரிக்க கர்நாடக அரசுக்கு அனுமதி வழங்கி சுப்ரீம் கோர்ட்டு உத்தரவிட்டுள்ளது. இதனால் இது தங்களுக்கு கிடைத்த வெற்றியாக கருதும் கர்நாடக அரசு, மேகதாது திட்ட பணிகளை தீவிரப்படுத்த திட்டமிட்டுள்ளது.

இந்த பணிகளை தொடங்க காவிரி நீர் மேலாண்மை ஆணையம், மத்திய நீர் ஆணையத்தின் ஒப்புதல் தேவை. இந்த ஒப்புதலை பெற கர்நாடக அரசு மும்முரமாக களத்தில் இறங்கியுள்ளது. கடந்த சில நாட்களுக்கு முன்பு கர்நாடக நீர்ப்பாசனத் துறை அலுவலகத்தில், மேகதாது திட்டத்தின் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க தனி அலுவலகத்தை கர்நாடக அரசு தொடங்கியுள்ளது.

மேலும் அணை அமைக்கப்படுவதால் அதற்கான நிலத்தை கையகப்படுத்தும் ஆயத்த பணிகளையும் கர்நாடக அரசு தொடங்கிவிட்டது. அதே நேரத்தில் எக்காரணம் கொண்டும் மேகதாது திட்டத்தை அமல்படுத்த விடமாட்டோம் என்று தமிழக அரசு உறுதிப்பட கூறி வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

முன்னதாக கர்நாடக முதல்மந்திரி சித்தராமையா பிரதமர் மோடியை நேற்று நேரில் சந்தித்து பேசினார். இந்த சந்திப்பின்போது மேகதாது திட்டத்துக்கு உடனே அனுமதி அளிக்க வேண்டும், கரும்பு விவசாயிகளுக்கு உதவ வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்தார்.

## பீகார் தேர்தல் முடிவை எதிர்த்து கோர்ட்டுக்கு செல்வோம்: ராஷ்டிரீய ஜனதாதளம்



பாட்னா, நவ.19

பீகார் சட்டசபை தேர்தலில் வெற்றி பெற்ற ராஷ்டிரீய ஜனதாதள எம்.எல்.ஏ.க்கள் கூட்டம் பாட்னாவில் நடந்தது. தேர்தலில் போட்டியிட்டு தோல்வி அடைந்த அக்கட்சி வேட்பாளர்களும் பங்கேற்றனர். அதில், தேர்வு முடிவுகளுக்கு பல்வேறு வேட்பாளர்கள் எதிர்ப்பு தெரிவித்தனர்.

கட்சியின்செய்தித்தொடர்பாளர்சக்திசிங்நிருபர்களிடம்கூறியதாவது: பீகார் தேர்தல் முடிவு, களநிலவரத்தையோ, மக்களின் விருப்பத்தையோ பிரதிபலிக்கவில்லை.மாநிலஅரசுமீதுமக்களுக்குஇருந்தகோபத்தையும் மீறி, இந்த தீர்ப்பை பெற்றுள்ளனர். இதை மக்களாலும், அரசியல்வாதிகளாலும் ஜீரணிக்க முடியவில்லை. இவ்வாறு அவர் கூறினார்.

மூத்த தலைவர் ஜெகதானந்த் சிங் கூறுகையில், ‘‘ஓட்டுப்பதிவு தொடங்குவதற்கு முன்பே ஒவ்வொரு மின்னணு வாக்குப்பதிவு எந்திரத்திலும் 25 ஆயிரம் வாக்குகள் இருந்தன. அதையும் மீறி 25 தொகுதிகளில்வெற்றிபெற்றோம்’’என்றார்.அனைத்துஆதாரங்களையும் சேகரித்த பிறகு கோர்ட்டுக்கு செல்வோம் என்று மற்றொரு வேட்பாளர் தெரிவித்தார்.

## தீபாவளி ஏல மோசடி - 1,500 பேரிடம் இரண்டு கோடிக்கு மேல் வசூல்; பாதிக்கப்பட்டோர் மனு

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு ஏல சீட்டு நடத்துவதாகக் கூறி சுமார் 1,500 பேரிடம் இரண்டு கோடிக்கு மேல் பணத்தை வசூல் செய்த மோசடி சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. பணம் பெற்ற பிறகு, ஒப்பந்தம் செய்த நபரை காண முடியாமல் தவித்த பொதுமக்கள் இன்று சென்னை காவல் கமிஷனரிடம் நேரில் சென்று எழுத்து மனு அளித்தனர்.

புகாரளித்தவர்கள் கூறியதாவது:

தீபாவளி பரிசுகள் வழங்கும் வகையில் ஏல சீட்டு வைக்கப்படுவதாக நம்பிக்கை ஏற்படுத்தி பல்வேறு பகுதிகளில் உள்ள பொது மக்களிடம் பணம் திரட்டினர். ஆரம்பத்தில்




சிலருக்கு சிறிய அளவில் பரிசுகள் வழங்கி நம்பிக்கை பெற்றதும், பின்னர் பெரும்பாலானோர் கொடுத்த பணத்தை திருப்பி வழங்காமல் ஏல ஏற்பாட்டாளர்கள் தடம் மாய்ந்துவிட்டனர்.

இச்சம்பவத்தில் சிக்கிய 1,500க்கும் மேற்பட்ட பாதிக்கப்பட்டவர்கள் ஒன்று கூடி, சம்பந்தப்பட்டவர்களை உடனடியாக கைது செய்து, தாங்கள் செலுத்திய பணத்தை மீட்டுத் தர நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரி காவல் கமிஷனரிடம் மனு சமர்ப்பித்தனர்.

மனு அளித்ததை உறுதிப்படுத்தும் அக்னாலெஜ்மென்ட் காவல்துறையினரால் வழங்கப்பட்டதுடன், ஏழு நாட்களுக்குள் தேவையான தகவல் தெரிவிக்கப்படும் என அதிகாரிகள் தெரிவித்ததாக பாதிக்கப்பட்டவர்கள் கூறினர்.

## டாடா பவர் நிறுவனம் 26ம் நிதியாண்டின் இரண்டாவது காலாண்டில் வலுவான முடிவுகளை பெற்றிருக்கிறது!

இந்தியாவின் மிகப்பெரிய செங்குத்தாக ஒருங்கிணைக்கப்பட்ட மின் நிறுவனங்களில் ஒன்றான டாடா பவர்

நிதியாண்டு 2026ன் இரண்டாம் காலாண்டில் டாடா பவர் மிகவும் சிறப்பாகச் செயல்பட்டுள்ளது. அவற்றின் வரிக்குப் பிந்தைய லாபம் (அனைத்து செலவுகள் மற்றும் வரிகளைச் செலுத்திய பிறகு நிறுவனம் வைத்திருக்கும் பணம்) அதிகரித்துள்ளது. செப்டம்பர் 30, 2025 அன்று முடிவடைந்த இரண்டாம் காலாண்டில் ₹ 1,245 கோடி (ஆண்டுக்கு ஆண்டு 14% வரை அதிகம்) வரிக்குப் பிந்தைய நிகர லாபம் (PAT) குறித்து இன்று அறிவித்தது. இந்நிறுவனத்தின் வருவாய் ₹ 15,769 கோடியாக (ஆண்டுக்கு ஆண்டு 3% வரை அதிகம்) உயர்ந்திருக்கிறது. அதே நேரத்தில் Q2 FY26.ல் EBITDA, ₹ 4,032 கோடியாக (ஆண்டுக்கு ஆண்டு 6% வரை அதிகம்) வளர்ச்சிக் கண்டிருக்கிறது.

H1FY26ல், நிகர லாபம் 10% வளர்ச்சியடைந்து ₹ 2,508 கோடியாக பதிவாகியது. வருவாய் 4% உயர்வடைந்து ₹ 33,233 கோடியாக அதிகரித்துள்ளது, EBITDA 11% க்கு வளர்ச்சிக் கண்டு ₹ 7,961 கோடியாகவும் இருந்தது.

டாடா பவர் நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரியும் நிர்வாக இயக்குநருமான டாக்டர் பிரவீர் சின்ஹா கூறுகையில், "டாடா பவர், Q2FY26 மற்றும் H1FY26 ஆகிய இரண்டிலும் வலுவான செயல்திறனை பதிவு செய்துள்ளது,

இது நிறுவனத்தின் ஒருங்கிணைந்த மற்றும் பல்வகைப்படுத்தப்பட்ட வணிக மாதிரியை நோக்கி எடுக்கப்பட்ட உத்திரீதியிலான செயல்பாடுகள் மற்றும் முடிவுகளின் வலிமையைப் பிரதிபலிப்பதாக அமைந்திருக்கிறது.

பாரம்பரிய மின் உற்பத்தி, தூய்மையான எரிசக்தி மற்றும் வாடிக்கையாளர்களை மையமாகக் கொண்டவிநியோகம்ஆகியபிரிவுகள்முழுவதிலும் வளர்ச்சி தொடர்கிறது.’’ என்றார்..

## சென்னை வொண்டர்லா டிசம்பர் 2 ஆம் தேதி திறக்கப்படவுள்ளது : தமிழ்நாட்டில் பொழுதுபோக்கிற்கான ஒரு புதிய சகாப்தம்

இந்தியாவின் மிகப்பெரிய பொழுதுபோக்கு பூங்கா சங்கிலியான வொண்டர்லா ஹாலிடேஸ், வொண்டர்லா சென்னையை இன்று தொடங்குவதாக அறிவித்துள்ளது, இது இந்தியாவின்குடும்பபொழுதுபோக்குநிலப்பரப்பில் ஒரு எதிர்காலத்திய மைல்கல்லைக் குறிக்கிறது. சென்னையின் அழகிய பழைய மகாபலிபுரம் சாலையில் 64.30 ஏக்கர் பரப்பளவில் (இதில் 37 ஏக்கர் தற்போது உருவாக்கப்பட்டுள்ளது) 611 கோடி ரூபாய்க்கும் அதிகமான முதலீட்டில் கட்டப்பட்டுள்ள வொண்டர்லா சென்னை, எதிர்கால புதுமை மற்றும் பண்டைய தமிழ் கட்டிடக் கலை ஆகியவற்றின் கலவையைக் கலந்து ஒரு துணிச்சலான புதிய அத்தியாயத்தைக்கு றிக்கிறது.

இந்த பூங்காவை 2025 டிசம்பர் 1ஆம் தேதி அதிகாரப்பூர்வமாக தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் மற்ற முக்கிய பிரமுகர்களுடன் இணைந்து திறந்து வைக்கிறார். இந்த பூங்கா 2025 டிசம்பர் 2 ஆம் தேதி பொதுமக்களுக்கு திறக்கப்படும்.

அருண் K.சிட்டிலபப்பிள்ளி (செயல் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குனர்), தீரன் சவுத்ரி (COO), அஜிகிருஷ்ணன் A G (VP பொறியியல்) மற்றும் வைஷாக்ரவீந்திரன்(பூங்காதலைவர் சென்னை) ஆகியோர் கலந்து கொண்ட செய்தியாளர் சந்திப்பில் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டது.

வொண்டர்லா சென்னையில் 43 உலகத் தரம் வாய்ந்த சவாரிகள் உள்ளன, இதில் உயர் த்ரில், குடும்பம், குழந்தைகள் மற்றும் நீர் விளையாட்டுகள் என்ற பிரிவுகளில் உள்ளன, இவை தினமும் 6,500 பார்வையாளர்களை மகிழ்விக்கும் வகையில் கட்டமைக்கப்பட்டுள்ளன. வொண்டர்லா சென்னைக்கான டிக்கெட்டுகள் ரூ.1,489 அடிப்படை விலையில் தொடங்குகின்றன, ஆன்லைன் முன்பதிவுகளுக்கு 10% தள்ளுபடியும், ஒரிஜினல் கல்லூரி ஐடியை காண்பிக்கும் மாணவர்களுக்கு மட்டும் 20% சலுகையும், குழுக்கள் மற்றும் பருவக்காலங்களுக்கு ஏற்ப




பிற தேர்ந்தெடுக்கப்பட்ட சலுகைகளும் உள்ளன.

இந்த அறிமுக நிகழ்வில் பேசிய வொண்டர்லா ஹாலிடேஸின் நிர்வாகத் தலைவரும் நிர்வாக இயக்குநருமான அருண் K சிட்டிலபப்பிள்ளி, “வொண்டர்லா சென்னை என்பது ஒரு தசாப்த கால கனவின் உச்சக்கட்டமாகும், இது தமிழக அரசின் தொடர்ச்சியான ஆதரவு மற்றும் ஊக்கத்தால் சாத்தியமானது. இந்தியாவின் மிகவும் மேம்பட்ட மற்றும் ஆழமான பொழுதுபோக்கு பூங்கா என்று நாங்கள் நம்புவதை நாங்கள் உருவாக்கியுள்ளோம். வொண்டர்லா சென்னை உண்மையிலேயே தமிழ்நாட்டு மக்களுக்குச் சொந்தமானது, அவர்களின் படைப்பாற்றல், கலாச்சாரம் மற்றும் அரவணைப்பை பிரதிபலிக்க வேண்டும் என்று நாங்கள் விரும்பினோம். தமிழ்நாட்டின் கோயில் சார்ந்த வடிவமைப்பு முதல் அதன் உண்மையான உள்ளூர் சுவைகள் வரை பூங்காவின் ஒவ்வொரு மூலையிலும் அந்தக் கதையைச் சொல்கிறது, இந்த அறிமுகம் தென்னிந்தியா முழுவதும் எங்கள் இருப்பைக் குறிப்பது மட்டுமல்லாமல், சுற்றுலா மற்றும் உள்கட்டமைப்புக்கான தமிழ்நாட்டின் முற்போக்கான பார்வைக்கு எங்கள் ஆழ்ந்த பாராட்டுகளையும் பிரதிபலிக்கிறது. நாடு முழுவதிலுமிருந்து வரும் குடும்பங்கள் மற்றும் சாகசவிரும்பிகளை வரவேற்க நாங்கள் எதிர்நோக்குகிறோம்” என்று கூறினார்.

"வொண்டர்லா ஹாலிடேஸின் தலைமை இயக்க அதிகாரி தீரன் சவுத்ரி அவர்கள், "வொண்டர்லா சென்னையைத் திறப்பதன் மூலம், வொண்டர்லாவின் பாதுகாப்பு, புதுமை மற்றும் செயல்பாட்டு பாரம்பரியத்தை தொடர்வதில் நாங்கள் பெருமை கொள்கிறோம். சவாரி செயல்பாடுகள் மற்றும் விருந்தினர் சேவைகள் முதல் சுகாதாரம் மற்றும் விருந்தினர் கூட்ட மேலாண்மை வரை பூங்காவின் ஒவ்வொரு அம்சமும் ஒரு தடையற்ற அனுபவத்தை வழங்க துல்லியமாக திட்டமிடப்பட்டுள்ளது. சவாரிகள் மற்றும் ஈர்ப்புகளுக்கு அப்பால், வொண்டர்லா சென்னை கொண்டாட்டத்திற்கான ஒரு இடமாகவும், பண்டிகைகள், மற்றும் மகிழ்ச்சியின் பகிரப்பட்ட தருணங்களைக் குறிக்க குடும்பங்களும், சமூகஅமைப்புகளும் ஒன்றிணையும் இடமாகவும் மாற வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம். சிந்தனையுடன் வடிவமைக்கப்பட்ட மதிப்புமிக்க சலுகைகள், தேர்ந்தெடுக்கப்பட்ட பருவகால நிகழ்வுகள் மற்றும் அணுகக்கூடிய விலை நிர்ணயம் மூலம், உலகத்தரம் வாய்ந்த பொழுதுபோக்குகளை தமிழ்நாட்டில் உள்ள அனைவரின் நாட்காட்டியின் ஒரு பகுதியாக மாற்றுவதே எங்கள் குறிக்கோள்" என்று கூறினார்.



# கொள்கை எதிரிகளை வீழ்த்த வேண்டிய கட்டாயம்: அமைச்சர் அன்பில் மகேஷ்



தஞ்சாவூர், நவ.19

தஞ்சாவூரில் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி செய்தியாளர்கள் சந்திப்பில் கூறியதாவது:

கடந்த 10 ஆண்டுகளாக நாங்கள் அனைவரும் ஒரே கூட்டணியாக பயணித்து வருகிறோம். எங்கள் பலமே கூட்டணிதான். கருத்துக்கள், கொள்கைகள்மாறுபட்டாலும்திமுக கூட்டணி பலமாக உள்ளது. ஒற்றுமை மற்றும் தோழமையுடன் இணைந்து கொள்கை எதிரிகளை எதிரிகளை வீழ்த்த வேண்டிய கட்டாயத்தில் உள்ளோம். எங்களின் வெற்றியை கூட்டணியின் பலத்திற்கான வெற்றியாக நாங்கள் பார்க்கிறோம். கூட்டணி தொடர்பாக விஜயிடம், ராகுல் காந்தி பேசியது தொடர்பாக அவர்களிடம் தான் கேட்க வேண்டும். மழை காலங்களில் பள்ளிகளில் தண்ணீர் தேங்கக்கூடாது; மாணவர்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

# 10 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி ஜாக்டோஜியோ வேலைநிறுத்தம்




சென்னை, நவ.19

ஜாக்டோஜியோ மாநில மையம் சார்பில் வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது:

கோரிக்கைகளை வலியுறுத்தி எப்போதெல்லாம் போராடுகிறோமோ அப்போதெல்லாம் அழைத்து பேசி ஆறுதல்படுத்துகிறார்களே தவிர, கோரிக்கைகள் நிறைவேற்றப்படவில்லை.

கடந்த பிப்ரவரி 24 ந்தேதி அமைச்சர்கள் கொண்ட குழு எங்களை அழைத்து பேச்சுவார்த்தை நடத்தியது. அதேபோல் மார்ச் 13 ந்தேதிமுதல்அமைச்சர் பேச்சுவார்த்தைநடத்தி 10 அம்ச கோரிக்கைகள் குறித்து விரிவாக பேசி நம்பிக்கை அளித்தார்.

அதன் அடிப்படையில் 12 லட்சம் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் மற்றும் அரசு பணியாளர்களின் உணவுமட்டத்தை அறிந்து எஞ்சிய சில மாதங்களே உள்ள நிலையில் எங்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்றாத காரணத்தினால், 18ந்தேதி (இன்று) ஒரு நாள் வேலைநிறுத்தத்தில் பங்கேற்க இருக்கிறோம்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழக வரலாற்றிலேயே முதல் முறை: தவெக நிர்வாகிகளுக்கு கியூ.ஆர்.குறியீட்டு அடையாள அட்டை



சென்னை, நவ.19

தவெக பொதுச்செயலாளர் புஸ்சி ஆனந்த் எக்ஸ் வலைத்தளபக்கத்தில்கூறியிருப்பதாவது,

தமிழக அரசியல் கட்சிகள் வரலாற்றிலேயே முதல்முறையாகத.வெ.க. நிர்வாகிகளுக்கு கியூ.ஆர். குறியீட்டுடன் கூடிய அடையாள அட்டை வழங்கியுள்ளோம். தமிழக வெற்றிக் கழகத்தில் இதுவரை பல்வேறு கட்டங்களாக சுமார் 3 லட்சம் பொறுப்பாளர்கள் தேர்வு செய்யப்பட்டு உள்ளனர்.

இவர்களில் முதல் கட்டமாக தற்போது 106 மாவட்டங்களுக்கு உட்பட்ட 214 சட்டசபை தொகுதிகளில் உள்ள ஆயிரத்து 280 நகர, ஒன்றிய, பேரூர் கழகங்கள் மற்றும் அதை சார்ந்த 21 ஆயிரத்து 134 கிளை மற்றும் வார்டுகளுக்குத் தேர்வு செய்யப்பட்ட பொறுப்பாளர்கள் 1 லட்சத்து 2 ஆயிரத்து 103 பேருக்கு கியூ. ஆர். கோடு குறியீட்டுடன் கூடிய டிஜிட்டல் அடையாள அட்டையை த.வெ.க. தலைவர் விஜய் அறிவுறுத்தலின் பேரில் அந்தந்த மாவட்ட செயலாளர்களிடம் வழங்கப்பட்டு உள்ளது.

இவ்வாறு அவர் கூறி உள்ளார்.

# சென்னை அருகே ரூ.301 கோடியில் சர்வதேச விளையாட்டு நகரம்




சென்னை, நவ.19

சென்னை அருகே செம்மஞ்சேரியில் நவீன வசதிகளுடன் கூடிய சர்வதேச விளையாட்டு நகரம் அமைக்கப்படும் என சட்டசபையில் கடந்த 2022ம் ஆண்டு அறிவிக்கப்பட்டது. இதனை செயல்படுத்தும் வகையில் விளையாட்டு நகரத்துக்கு அனுமதி அளித்து தமிழக அரசு நேற்று அரசாணையை வெளியிட்டது.

இதன்படி செம்மஞ்சேரியில் 112.12 ஏக்கர் பரப்பளவில் ரூ.301 கோடி மதிப்பீட்டில் பிரமாண்டமான விளையாட்டு நகரம் உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கு முதற்கட்டமாக ரூ.30 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. நீர்விளையாட்டுகள், கால்பந்து மைதானம், ரோலர் ஸ்கேட்டிங், துப்பாக்கி சுடுதல், வில்வித்தை, சைக்கிளிங், தடகளத்துக்கான ஓடுதளம், பல்நோக்கு உள்விளையாட்டு அரங்கம் உள்பட பல்வேறு போட்டிகள் நடத்தும் வகையில் உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்படுகிறது.

# புதுக்கோட்டை அருகே தனியார் பஸ்சில் ரூ.4½ கோடி உயர் ரக போதைப்பொருள் சிக்கியது; தீவிர விசாரணை



தொண்டி, நவ.19

புதுக்கோட்டையில் இருந்து தொண்டி சென்ற தனியார் பஸ்சில் உயர் ரக போதைப்பொருள் கடத்தி செல்லப்படுவதாக தொண்டியை சேர்ந்த சுங்கத்துறை அதிகாரிகளுக்கு தகவல் கிடைத்தது. அதன் அடிப்படையில் ராமநாதபுரம் சுங்கத்துறை இணை ஆணையர் பிரகாஷ் மற்றும் தொண்டி அதிகாரிகள், நேற்று மதியம் எஸ்.பி.பட்டினத்தை அடுத்த கலியநகரி கிராமத்தின் அருகே சோதனையில் ஈடுபட்டனர். புதுக்கோட்டையில் இருந்து தொண்டி நோக்கி வந்து கொண்டிருந்த தனியார் பஸ்சை மறித்தும் சோதனை செய்தனர்.

அந்த பஸ்சில் பயணிகள் உடைமைகள் வைக்கும் இடத்தில் சந்தேகப்படும் வகையில் ஒரு பாலித்தீன் பை இருந்தது. அதனை கைப்பற்றி பிரித்து பார்த்த போது, அதில் உயர்ரக ஐஸ் போதைப்பொருள் இருந்தது.உடனே பஸ்சை முழுமையாக அதிகாரிகள் சோதனையிட்டனர். அந்த போதைப்பொருளை கடத்தி வந்தவர் யார்? என தெரியாததால் பஸ் டிரைவர் மற்றும் கண்டக்டரிடம் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். ஐஸ் ரக போதைப்பொருள் சுமார் 1½ கிலோ எடையில் கைப்பற்றப்பட்டு உள்ளது. இதன் சர்வதேச மதிப்பு சுமார் ரூ.4½ கோடி என கூறப்படுகிறது.

# பெண் கழுத்தறுத்து கொலை... குடும்ப தகராறில் கணவர் வெறிச்செயல்



தர்மபுரி நவ.19

தர்மபுரி மாவட்டம் அரூரை சேர்ந்தவர் பூங்கொடி. இவருடைய மகள் மகாலட்சுமி (29 வயது). இவருக்கும், கிருஷ்ணகிரி மாவட்டம் பர்கூர் அருகே உள்ள கோதியழகனூரை சேர்ந்த வெங்கடேஷ் (34 வயது) என்பவருக்கும் கடந்த 9 ஆண்டுகளுக்கு முன்பு திருமணம் நடைபெற்றது.

இந்த தம்பதிக்கு ஒரு மகனும், ஒரு மகளும் உள்ளனர். 4 மாதங்களுக்கு முன்பு கணவன், மனைவி இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டது. இதனால் மகாலட்சுமி குழந்தைகளுடன் அரூரில் உள்ள தனது பெற்றோர் வீட்டில் வசித்து வந்தார். இந்த நிலையில் கடந்த 15ந்தேதி அரூருக்கு வந்த வெங்கடேஷ், தனது மனைவி மற்றும் குழந்தைகளை அழைத்து கொண்டு திருச்செந்தூர் முருகன் கோவிலுக்கு சென்றுவிட்டு நேற்று காலை அரூருக்கு வந்தனர்.

வீட்டில் இருந்தபோது கணவன், மனைவி இடையே மீண்டும் தகராறு ஏற்பட்டது. இதில், ஆத்திரமடைந்த வெங்கடேஷ், மனைவி மகாலட்சுமியின் கழுத்தை கத்தியால் அறுத்ததாக தெரிகிறது. இதில் ரத்தவெள்ளத்தில் மகாலட்சுமி, சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தார். பின்னர் வெங்கடேஷ் 2 குழந்தைகளையும் அழைத்துக் கொண்டு அங்கிருந்து ஓடிவிட்டார். இது குறித்து அரூர் போலீசார் வழக்குப்பதிவு செய்து தலைமறைவான வெங்கடேசை தேடி வருகிறார்கள்.

# எனது ஆசை வெகுவிரைவில் நிறைவேறும் செங்கோட்டையன் நம்பிக்கை



மதுரை, நவ.19

மதுரையில் அதிமுக முன்னாள் அமைச்சர் செங்கோட்டையன் செய்தியாளர்கள் சந்திப்பில் கூறியதாவது:

ஒருங்கிணைந்த அ.தி.மு.க.வை விரைவில் எதிர்பார்க்கலாம். அதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அது நல்ல முடிவாக இருக்கும். நான் பா.ஜனதா தலைவர்களை நேரில் பார்த்தேன். அப்போது பல்வேறு கருத்துகள் பரிமாறப்பட்டன.

அதனை இங்கு பகிர்வது அரசியல் நாகரிகமாக இருக்காது. பா.ஜனதா தரப்பில் அழைக்கப்பட்ட பிறகுதான் டெல்லி சென்றேன் என சொன்னேன். ஒரு முறை அழைத்தார்கள், 2வது முறை நானே சந்தித்தேன். மீண்டும் அ.தி.மு.க.வில் இணைவது குறித்து தலைமைதான் முடிவு செய்ய வேண்டும்.

டி.டி.வி.தினகரனுடன் இணைந்து விஜய்யுடன் கூட்டணி அமைக்க போவது குறித்தும், கூட்டணி குறித்த எந்த கருத்தும் சொல்ல இயலாது. எல்லோரும் ஒருங்கிணைய வேண்டும் என்பதே ஆசை. அந்த ஆசை நிறைவேறும்காலம் வெகுவிரைவில் உள்ளது. ஒருங்கிணைப்பு நடைபெறுவது குறித்து பொறுத்திருந்து பாருங்கள்.

இவ்வாறு அவர் கூறினார்.

# சென்னையில் வாக்காளர் உதவி மையங்கள் செயல்படும்




சென்னை, நவ.19

சிறப்பு தீவிர திருத்த கணக்கீட்டு படிவங்களில் வாக்காளர்களுக்கு ஏற்படும்சந்தேகங்களுக்குதீர்வு காண சென்னையில் இன்று முதல் 25ந்தேதி வரையில் வாக்காளர் உதவி மையங்கள் செயல்படும் என மாநகராட்சி தெரிவித்துள்ளது.

சென்னை மாநகராட்சி கமிஷனர் குமரகுருபரன் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

2026 பொதுத்தேர்தலுக்கான சிறப்பு தீவிர திருத்தப்பணிகள் சென்னை மாவட்டத்தில் தீவிரமாக நடந்து வருகிறது. சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட 16 சட்டமன்றத் தொகுதிகளிலும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 16 சட்டமன்றத் தொகுதிகளிலும் வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் வீடு, வீடாக சென்று வாக்காளர்களுக்கு கணக்கீட்டுப் படிவங்களை வழங்கி நிரப்பப்பட்ட படிவங்களை பெற்று வருகின்றனர். கணக்கீட்டுப்படிவங்களை பூர்த்தி செய்வதில் வாக்காளர்களுக்கு ஏற்படும்சந்தேகங்களுக்குதீர்வு காணவும், வாக்காளர்கள் மற்றும் அவர்களது உறவினர் பெயர்கள் 2005ம் ஆண்டு வாக்காளர் பட்டியலில் இடம் பெற்ற விவரங்களை கண்டறியவும் இன்று (செவ்வாய்க்கிழமை) முதல் 25ந்தேதி வரை 8 நாட்களுக்கு 947 வாக்குச்சாவடி மையங்களில் வாக்காளர் உதவி மையங்கள் செயல்பட உள்ளது. காலை 10 மணி முதல் மாலை 6 மணி வரை வாக்காளர்களுக்கான சேவைகள் வழங்கப்படும்.

வாக்காளர் உதவி மையங்களில் சம்பந்தப்பட்ட பகுதி வாக்காளர்கள் விண்ணப்பங்களைபூர்த்தி செய்வதற்கான வழிகாட்டுதல்களை பெறலாம். மூத்த குடிமக்கள், மாற்றுத்திறனாளிகளுடன் ஒருவர் துணையாக வரலாம். இந்த உதவி மையங்களில் கணக்கீட்டு படிவங்களுடன் இணைக்கப்பட வேண்டிய ஆவணங்கள், வாக்காளர் விவரங்கள் சரிபார்க்கப்படும்.

இப்பணிகளை வெற்றிகரமாக செய்துமுடிக்க அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளின் வாக்குச்சாவடி நிலை முகவர்களின் பங்கு இன்றியமையாதது. இந்திய தேர்தல் கமிஷனின் வழிகாட்டுதலின்படி, அரசியல் கட்சிகளின் வாக்குச்சாவடி முகவர்கள், வரைவு வாக்காளர் பட்டியல் வெளியீட்டுக்கு முன்பு வரை நாள்தோறும் அதிகபட்சம் 50 எண்ணிக்கையிலான நிரப்பப்பட்ட கணக்கீட்டுப் படிவங்களை பெற்று வழங்க அனுமதித்துள்ளது. அவ்வாறு படிவங்களை சமர்ப்பிக்கும் போது அதற்கான உறுதிமொழியை இணைத்து வாக்குச்சாவடி நிலை அலுவலர்களிடம் வழங்க வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# டிஜிட்டல் கைது செய்ததாக மிரட்டல்: பெண் என்ஜினீயரிடம் ரூ.32 கோடி பறிப்பு

பெங்களூரு, நவ.19

பெங்களூரு இந்திராநகரில் 57 வயது பெண் வசித்து வருகிறார். கம்ப்யூட்டர் என்ஜினீயரான அவர், தனியார் நிறுவனத்தில் உயர் பதவியில் இருந்து வருகிறார். கடந்த ஆண்டு(2024) செப்டம்பர் 15ந் தேதி மும்பை அந்தேரியில் உள்ளகூரியர்நிறுவனத்தில் இருந்து பேசுவதாக கூறி ஒரு நபர் அப்பெண்ணிடம் பேசினார். அப்போது உங்களது பெயரில் 3 சிம் கார்டுகள், கிரெடிட் கார்டுகள், 4 பாஸ் போர்ட்டுகள் மற்றும் எம்.டி.எம்.ஏ. போதைப்பொருட்கள் அடங்கிய பார்சல் வந்திருப்பதாக கூறினார்.அது தன்னுடையது இல்லை என்று கூறி அந்த பெண் மறுத்தபோதும், இது சைபர் குற்றம் என்று கூறி எதிர்முனையில் பேசிய நபர் மிரட்டினார். பின்னர் சி.பி.ஐ.அதிகாரிகள்என்று கூறி மேலும் சிலர் பேசி பெண்ணை மிரட்டினர்.

அந்த பெண் மற்றும் அவரது சொத்து குறித்த தகவல்களை பெற்றுக் கொண்ட மர்மநபர்கள், அவரை டிஜிட்டல் கைது செய்திருப்பதாக கூறினர். சி.பி.ஐ. அதிகாரிகள் ரகசியமாக கண்காணித்து வருவதாகவும், இந்த விவகாரம் குறித்து வெளியே தெரிந்தால், உங்களது குடும்பத்தினரையும்வழக்கில் சிக்க வைத்து விடுவோம் என்றும் மர்மநபர்கள் அப்பெண்ணை மிரட்டி பணம் பறித்துள்ளனர்.இவ்வாறாக கடந்த ஆண்டு செப்டம்பர்மாதம் முதல் இந்த ஆண்டு பிப்ரவரி மாதம் வரை 6 மாதங்களாக அந்த பெண்ணை மிரட்டி ஒட்டு மொத்தமாக ரூ.31 கோடியே 83 லட்சத்தை மர்ம நபர்கள் பறித்தனர். அதாவது மர்ம நபர்கள் கூறிய வங்கி கணக்குகளுக்கு 187 தவணைகளில் பணத்தை அந்த பெண் கம்ப்யூட்டர் என்ஜினீயர் செலுத்தி இருந்தார். அந்த பணத்தை வழக்கு முடிந்த பிறகு திருப்பி தந்துவிடுவோம் என்று மர்ம நபர்கள் கூறியிருந்தனர்.

முடிவில் அந்த பெண் போதைப்பொருள் கடத்தல் உள்ளிட்ட சட்டவிரோத செயல்களில் ஈடுபடவில்லை என்று சான்றிதழ்களை மர்மநபர்கள் அனுப்பி வைத்திருந்தனர். ஆனால் அவர்கள் கொடுப்பதாக கூறியிருந்த ரூ.31 கோடியே 83 லட்சத்தை திரும்ப கொடுக்கவில்லை. அப்போது தான் தன்னை மிரட்டி மர்மநபர்கள் ரூ.31.83 கோடியை பறித்திருப்பதை அந்த பெண் உணர்ந்தார். இதுபற்றி கடந்த 14ந்தேதி கிழக்கு மண்டல சைபர் கிரைம் போலீசில் அந்த பெண் புகார் அளித்தார்.

அதன்பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து மர்மநபர்களை வலைவீசி தேடி வருகின்றனர்.

# 2 கிராம் மோதிரத்திற்காக முதியவர் அடித்துக் கொலை 2 வாலிபர்கள் கைது



திருவண்ணாமலை நவ.19

திருவண்ணாமலை மாவட்டம் வெம்பாக்கம் தாலுகாதூசி அருகே உள்ள குடியாந்தண்டலம் கிராமத்தை சேர்ந்தவர் மன்னார்சாமி (89 வயது). இவர் காலையில் அருகில் உள்ள அம்மன் கோவிலுக்கு சென்று வழிபடுவது வழக்கம். அதன்படி கடந்த 13ந்தேதி காலையில் அம்மன் கோவிலுக்கு சென்றுள்ளார். பின்னர் அவர் வீடு திரும்பவில்லை.

இதுகுறித்து தூசி போலீஸ் நிலையத்தில் புகார் செய்யப்பட்டது. அதன்பேரில் மன்னார்சாமியை தேடும் பணியில் போலீசார் ஈடுபட்டனர். அப்போது அம்மன் கோவில் அருகே உள்ள புதரில் அவர் பிணமாக கிடப்பதாக தகவல் கிடைத்தது. அதைத்தொடர்ந்து அங்கு சென்ற போலீசார் முதியவரின் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக காஞ்சிபுரம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

அங்கு பிரதே பரிசோதனை செய்ததில் அவர் அடித்து கொலை செய்யப்பட்டது தெரிய வந்தது. அதன் அடிப்படையில் போலீசார் விசாரணையை தொடங்கினர். இதுதொடர்பாக அதே பகுதியை சேர்ந்த பிரவீன்குமார் (19 வயது), தினேஷ் (25 வயது) ஆகிய இருவரையும் சந்தேகத்தின் பேரில் பிடித்து விசாரணை நடத்தினர். விசாரணையில் அவர்கள் மன்னார்சாமியை கொலை செய்ததை ஒப்புக்கொண்டதாக கூறப்படுகிறது.

கோவிலில் சாமி தரிசனம் செய்து விட்டு அங்கேயே அமர்ந்திருந்த மன்னார்சாமியை நோட்டமிட்ட அவர்கள் இருவரும் முதியவர் மன்னார்சாமி கையில் அணிந்திருந்த 2 கிராம் மோதிரத்தை பறிக்க திட்டமிட்டுள்ளனர்.

அதற்காக அவரை அருகில் உள்ள புதருக்கு அழைத்து சென்று தாக்கி படுகொலை செய்து, மோதிரத்தை பறித்து சென்றதாக அவர்கள் கூறியதாக போலீசார் தெரிவித்தனர். அதைத்தொடர்ந்து தினேஷ், பிரவீன்குமார் மீது போலீசார் வழக்குப்பதிவு செய்து இருவரையும் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# நீலகிரி: யானை வழித்தடத்தில் கட்டப்பட்ட விடுதி, ஐகோர்ட்டு உத்தரவின்படி இடிப்பு



நீலகிரி, நவ.19

நீலகிரி மாவட்டம் மசினகுடி ஊராட்சி பகுதியில் யானை வழித்தடங்களில் விடுதிகள் கட்டப்படுவதாக சென்னை ஐகோர்ட்டில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. அதன் அடிப்படையில் யானை வழித்தடங்களில் உள்ள கட்டிடங்கள் குறித்து அதிகாரிகள் குழு கடந்த காலங்களில் ஆய்வு நடத்தி அறிக்கை தாக்கல் செய்தது.

இதைத்தொடர்ந்து யானை வழித்தடங்களில் உள்ள விடுதிகள் அடையாளம் காணப்பட்டு, பூட்டி சீல் வைக்கப்பட்டது. இதற்கிடையே வாழைத்தோட்டம் பகுதியை சேர்ந்த காலன் என்பவர், அதே பகுதியில் யானை வழித்தடத்தில் விடுதி கட்டப்பட்டு உள்ளதாக ஐகோர்ட்டில் வழக்கு தொடுத்தார். அந்த வழக்கு விசாரணை நடைபெற்று வந்தது. இறுதியில் யானை வழித்தடத்தில் கட்டப்பட்ட விடுதி கட்டிடத்தை உடனடியாக அகற்ற வேண்டும்எனஐகோர்ட்டு உத்தரவிட்டது.

இதுதொடர்பாக அதிகாரிகள் ஆலோசனைநடத்தி, ஐகோர்ட்டு உத்தரவை நிறைவேற்றுவது என முடிவு செய்தனர். இந்தநிலையில் கூடலூர் வட்டார வளர்ச்சி அலுவலர் சுப்பிரமணி தலைமையில் வருவாய்த்துறை, போலீசார், வனத்துறையினர் இணைந்து வாழைத்தோட்டம் பகுதியில் யானை வழித்தடத்தில் கட்டப்பட்ட பெங்களூருவை சேர்ந்த திவாக ரத்தினம் என்பவரது விடுதி கட்டிடத்தை பொக்லைன் எந்திரம் மூலம் நேற்று இடித்து அகற்றினர்.

தொடர்ந்து யானை வழித்தடத்தில் கட்டிடங்கள் கட்டினால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என அதிகாரிகள் எச்சரித்தனர்.

இதுகுறித்து அதிகாரிகள் கூறும்போது, ஐகோர்ட்டில் தொடுத்த வழக்கின் அடிப்படையில் யானை வழித்தடத்தில் 1,300 சதுர அடி பரப்பளவில் கட்டப்பட்ட விடுதி கட்டிடம் இடிக்கப்பட்டது.

இதுதொடர்பாக உரிய அறிக்கைதயாரிக்கப்பட்டு ஐகோர்ட்டில் சமர்ப்பிக்கப்படும் என்றார்.

# ஆன்லைன் வியாபாரத்தில் முதலீடு செய்தால் இரட்டிப்பு லாபம் என்று கூறி பெண் தொழில் அதிபரிடம் ரூ.25 லட்சம் மோசடி

சென்னை, நவ.19

சென்னை மந்தைவெளியை சேர்ந்தவர் சுதா கார்த்திக் (44 வயது). சாப்ட்வேர் என்ஜினீயரான இவர், தொழில் அதிபராகவும் உள்ளார். இவர், சென்னை போலீஸ் கமிஷனர் அலுவலகத்தில் கொடுத்த புகார் மனுவில், தனது 'வாட்ஸ்அப்' எண்ணில் தொடர்புகொண்ட அடையாளம் தெரியாத நபர் 'ஆன்லைன்' வியாபாரத்தில் முதலீடு செய்தால் இரட்டிப்பு லாபம் கிடைக்கும் என்று ஆசைவார்த்தை கூறினார். அதை நம்பி ரூ.25 லட்சம் முதலீடு செய்து மோசம் போய்விட்டதாகவும், அதுதொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கும்படியும் கூறியிருந்தார்.

இதுதொடர்பாக உரிய விசாரணை நடத்தும்படி கிழக்கு மண்டல சைபர் கிரைம் போலீசாருக்கு கமிஷனர் அருண் உத்தரவிட்டார். அதன்பேரில் கிழக்கு மண்டல சைபர் கிரைம் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தினார்கள். விசாரணையில் 'ஆன்லைன்' மோசடியில் முக்கிய குற்றவாளியான கர்நாடக மாநிலத்தை சேர்ந்த தீபா (26 வயது) என்ற பெண்ணை கைது செய்தனர்.

அவர், சென்னை அழைத்து வரப்பட்டார். அவரிடம் விசாரணை நடத்தியபோது பெங்களூருவில் உள்ள துணிக்கடை ஒன்றில் வேலை பார்ப்பதாகவும், ஆன்லைன் மோசடி குற்றவாளிகளுக்கு துணையாக செயல்பட்டு வந்ததும் தெரிய வந்தது. தீபா, நீதிமன்ற காவலில் சிறையில் அடைக்கப்பட்டார். இந்த வழக்கில் மேலும் சிலரை தேடி வருவதாக போலீசார் தெரிவித்துள்ளனர்.

# 6 மாதங்களாக பெண்ணை மிரட்டி ரூ.31.83 கோடி பணம் பறித்த கும்பல்

பெங்களூரு, நவ.19

தொழில்நுட்ப வளர்ச்சியால் நமது வாழ்வை எளிமையாக்கும் வகையில் பல்வேறு நவீன கண்டுபிடிப்புகள் நாள்தோறும் பயன்பாட்டிற்கு வந்து கொண்டிருக்கின்றன. அதே சமயம், தொழில்நுட்ப வளர்ச்சியை தவறான நோக்கத்துடன் பயன்படுத்தி, அப்பாவி மக்களிடம் இருந்து பணம் பறிக்கும் கும்பலும் மற்றொரு புறத்தில் செயல்பட்டுக் கொண்டு இருக்கிறது.

அந்த வகையில் மோசடிக்காரர்கள் பயன்படுத்தும் 'டிஜிட்டல் கைது' என்ற மோசடி வலையில் சிக்கி பலர் தங்கள் பணத்தையும், நிம்மதியையும் இழந்துள்ளனர். 'டிஜிட்டல் கைது' என்பது, மோசடி கும்பல் சி.பி.ஐ., அமலாக்கத்துறை, வருமான வரித்துறை அதிகாரிகளை போல பேசி பொதுமக்களை வீட்டில் சிறை பிடித்து பணம் பறிப்பதாகும். இதுபோன்ற டிஜிட்டல் கைது மோசடிகள் நாடு முழுவதும் நடந்து வருகின்றன.

இந்த நிலையில் பெங்களூருவில் டிஜிட்டல் கைது மோசடி மூலம் பெண்ணிடம் 31 கோடியே 83 லட்சரூபாய் மோசடி செய்யப்பட்ட சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. பெங்களூருவை சேர்ந்த 57 வயது பெண் ஐ.டி. நிறுவனம் ஒன்றில் மூத்த அதிகாரியாக பணியாற்றி வருகிறார். அந்த பெண்ணுக்கு கடந்த ஆண்டு செப்டம்பர் 15ந்தேதி புதிய எண்ணில் இருந்து தொலைபேசி அழைப்பு வந்துள்ளது.

அதில் பேசியவர்கள், அந்த பெண்ணின் பெயரில் அனுப்பப்பட்ட பார்சல் ஒன்றில் போதைப் பொருள் இருப்பது கண்டறியப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளனர். இந்த வழக்கு சி.பி.ஐ.க்கு மாற்றப்படுவதாகவும், உள்ளூர் காவல் நிலையத்தில் இது குறித்து எந்த தகவலும் தெரிவிக்க கூடாது என்றும் அவர்கள் கூறியுள்ளனர். மேலும், 'நீங்கள் எங்கள் கண்காணிப்பு வளையத்திற்குள் வந்து விட்டீர்கள், இனி எங்கள் அனுமதி இல்லாமல் யாரிடமும் எதுவும் பேசக்கூடாது' என்று அவர்கள் மிரட்டியுள்ளனர்.

இருப்பினும் அந்த பெண் தனக்கு போதைப் பொருள் கடத்தல் விவகாரத்தில் தொடர்பு இல்லை என்று உறுதியாக கூறியுள்ளார். இதையடுத்து, அந்த பெண்ணை வழக்கில் இருந்து விடுவிப்பதற்கான நடைமுறைகளை மேற்கொள்வதற்கு பணம் செலுத்த வேண்டும் என்று கேட்டுள்ளனர். அவர்கள் கூறியபடி, சுமார் 187 வங்கி கணக்குகளுக்கு அந்த பெண் ரூ.31.83 கோடி பணம் அனுப்பியுள்ளார். இவ்வாறு சுமார் 6 மாதங்களாக இந்த மிரட்டல் நடவடிக்கை தொடர்ந்துள்ளது.

இதனால் அந்த பெண் மிகுந்த மன உளைச்சலுக்கு ஆளாகியுள்ளார். இந்த காலகட்டத்தின் போது அவர் பணிபுரிந்த அலுவலகத்தில் அனுமதி வாங்கி வீட்டில் இருந்து வேலை செய்து வந்துள்ளார். ஒருவழியாக மார்ச் மாதத்திற்கு பிறகு மோசடி கும்பலை சேர்ந்தவர்கள், அந்த பெண்ணிடம் பணம் கேட்பதை நிறுத்தியுள்ளனர். இதன் பிறகு தனக்கு நடந்தது ஒரு மோசடி என்பது அந்த பெண்ணுக்கு தெரியவந்தாலும், ஜூன் மாதம் தனது மகனின் திருமணம் நிச்சயிக்கப்பட்டிருந்ததால், இது குறித்து போலீசில் புகார் அளிக்காமல் இருந்து வந்தார்.

இந்த நிலையில், 6 மாதங்களாக டிஜிட்டல் கைது என்ற பெயரில் தனக்கு நேர்ந்த கொடுமை குறித்து பாதிக்கப்பட்ட பெண் தற்போது போலீசில் புகார் அளித்துள்ளார். இந்த புகார் குறித்து சைபர் கிரைம் போலீசார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த வழக்கில் மோசடி செய்யப்பட்ட தொகை அதிகமாக இருப்பதால், இந்த வழக்கு சி.பி.ஐ.க்கு மாற்றப்பட வாய்ப்பு உள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# தமிழ்நாட்டில் 9 மத்திய சிறையில் சம்பாதிக்கும் கைதிகள்

சென்னை, நவ.19

தமிழ்நாட்டில் 9 மத்திய சிறைகள், பெண் கைதிகளுக்காக 5 தனி சிறைகள், 14 மாவட்ட சிறைகள் மற்றும் மாவட்டங்களில் கிளை சிறைகள் என்று மொத்தம் 141 சிறைகள் இருக்கின்றன. இவற்றில் விசாரணை கைதிகள் மற்றும் நீதிமன்றங்களால் தண்டனை பெறும் கைதிகள் அடைக்கப்படுகின்றனர். சிறைகள் வெறும் தண்டனை வழங்கும் இடம் மட்டுமல்ல. அது கைதிகளை நல்வழிப்படுத்தி சீர்திருத்தும் பணியை செய்யும் உன்னத பள்ளியாகும். இதனால்தான் பாவங்களை வெறுங்கள், பாவிகளை வெறுக்காதீர்கள் என்று தேசபிதா காந்தியடிகள் அடிக்கடி கூறுவார். சிறையில் இருந்து வெளியே வருபவர்கள் குற்ற செயல்கள் செய்வதில் இருந்து திருந்தி, வேலை செய்து பொருள் ஈட்டுவதற்கான முயற்சிகள் இப்போது மேற்கொள்ளப்படுகின்றன. சிறையில் கல்வியறிவு இல்லாத சிறைவாசிகளுக்கு அடிப்படை கல்வி கற்பிக்கப்பட்டு வருகிறது.

இதுதவிர கைதிகள் ஆரம்பக்கல்வி, தொடக்கக்கல்வி, உயர்நிலை மற்றும் மேல் நிலைக்கல்வி, பட்டயம் மற்றும் சான்றிதழ் படிப்புகள், திறந்த வெளி பல்கலைக்கழகங்கள் மூலமாக இளநிலை மற்றும் முதுநிலை பட்டப்படிப்புகள் படிக்கவும் முடியும். ஏராளமான கைதிகள் சிறையில் இருந்து விடுதலையாகும்போது பட்டதாரிகளாகவோ, முதுநிலை பட்டதாரிகளாகவோ வெளியே வருகின்றனர். கைதிகளுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சிகளும் அளிக்கப்படுகிறது. இத்தகைய பயிற்சிகளை பெற்ற கைதிகள் சிறையில் இருக்கும்போதே அந்த திறன் அறிவை பயன்படுத்தி பல பொருட்களை தயாரிக்கிறார்கள். அவர்கள் செய்யும் வேலைக்கு சம்பளமும் வழங்கப்படுகிறது. அவர்களில் செயல்திறன் பெற்றவர்களுக்கு தினமும் ரூ.300ம், பகுதி செயல்திறன் பெற்றவர்களுக்கு ரூ.270ம், செயல்திறன் பெறாதவர்களுக்கு ரூ.240ம் ஊதியமாக வழங்கப்படுகிறது.

கைதிகள் தயாரிக்கும் பொருட்களை சந்தைப்படுத்த மத்திய சிறைகள், மாவட்ட சிறைகள் மற்றும் சில கிளைச் சிறைகளில் சிறைச்சந்தைகள் அதாவது 'பிரிசன் பஜார்'கள் நிறுவப்பட்டுள்ளன. கைதிகளால் தயாரிக்கப்படும் கேக், பிஸ்கட் போன்ற பேக்கரி பொருட்கள், தோல் காலணிகள், பணப்பைகள், பர்சுகள், தோட்டக்கலை தயாரிப்புகள், சலவை சோப்புகள், மெழுகுவர்த்திகள், கொசுவலைகள், ரெயின் கோட்டுகள், ஷூ பாலிஷ்கள், ரெடிமேடு ஆடைகள், அச்சுவேலைப்பாடுகளுடன் கூடிய சேலைகள், போர்வைகள், துண்டுகள், மசாலா பொருட்கள், கைவினை பொருட்கள், காகித உறைகள், நோட்டு புத்தகங்கள், இயற்கை உரமிட்ட காய்கறிகள், செக்கு எண்ணெய், மண்புழு உரம், கரிம பூச்சி கொல்லிகள், ஓவியங்கள் போன்ற பல்வேறு பொருட்கள் பிரீடம் என்ற குறியீட்டு பெயரில் அதாவது டிரேடு மார்க்கில் விற்கப்படுகின்றன. சிறை சந்தைகளில் உணவகம், அழகு நிலையங்கள், இஸ்திரி போடும் நிலையங்களும் செயல்படுகின்றன.

சில சிறை வளாகங்களில் பெட்ரோல் பங்குகளும் அமைக்கப்பட்டு ஆண், பெண் கைதிகளால் இயக்கப்பட்டு வருகின்றன. இத்தகைய சிறை சந்தைகளில் நடக்கும் விற்பனையில் கிடைக்கும் லாபத்தில் 20 சதவித தொகை, வேலை செய்த சிறைவாசிகளுக்கு ஊதியமாக வழங்கப்படுகிறது. இவ்வாறு கைதிகள் செய்த பொருட்களை விற்பனை செய்வதில் இந்தியாவிலேயே தமிழ்நாடுதான் முதல் இடத்தில் இருக்கிறது. செய்த குற்றத்துக்காக கைதிகளுக்கு வெறும் தண்டனை மட்டும் கொடுத்து விடுதலை செய்யாமல், கல்வியறிவு புகட்டி, சிறையில் இருக்கும்போதே ஏதாவது தொழிலையும் கற்றுக்கொடுத்து, அதனை செய்யவும் வைத்து அனுபவமிக்கவர்களாகவும் மாற்றி, அதற்காக ஊதியமும் கொடுக்கப்படுகிறது. இதனால் தண்டனை காலத்தை வேதனையுடன் கழித்துவிட்டு விடுதலையாகும்போது வாழ்க்கை சக்கரத்தை ஓட்டுவதற்காக கையில் ஒரு தொழிலும், அதை தொடங்குவதற்கு தான் சம்பாதித்த பணத்துடன் வெளியே வரும் சிறைவாசிகள், புதிய காற்றை சுவாசித்து சமுதாயத்தில் பொறுப்புள்ள நன்மதிப்புடைய குடிமக்களாக வலம் வருவார்கள் என்பதில் சந்தேகமே இல்லை.

# மெக்கா பயணத்தின்போது விபத்தில் 42 இந்தியர்கள் பலி: விஜய் இரங்கல்

சென்னை, நவ.19

சவுதி அரேபியாவில் பேருந்து விபத்துக்குள்ளானதில் 42 இந்தியர்கள் உயிரிழந்தனர். அவர்களில் பலர் இந்தியாவின் தெலுங்கானா மாநிலத்தில் இருந்து சென்றவர்கள் என்பதும், அனைவரும் சவுதி அரேபியாவின் மெக்கா நகரில் இருந்து மெதினா நோக்கி உம்ரா புனித பயணம் மேற்கொண்டவர்கள் என்பதும் தெரியவந்துள்ளது. உயிரிழந்தவர்களின் குடும்பத்துக்கு இந்திய அரசியல் தலைவர்கள் இரங்கல் தெரிவித்து வருகின்றனர்.



இந்த நிலையில், இந்த விபத்து தொடர்பாக தவெக தலைவர் விஜய் தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டு இருப்பதாவது;

"தெலுங்கானா மாநிலத்திலிருந்து சவுதி அரேபியாவின் மெக்காவிற்குப் புனிதப் பயணம் மேற்கொண்ட 42 பேர், மதீனா அருகே நிகழ்ந்த விபத்தில் காலமான செய்தியறிந்து மிகுந்த மன வேதனை அடைந்தேன். உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு, உயிரிழந்தவர்களின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்."

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பிளஸ்2 மாணவிக்கு பாலியல் தொல்லை: தொழிலாளி கைது

சென்னை நவ.19

சென்னை தாம்பரம் அடுத்த சேலையூர் பகுதியை சேர்ந்த 16 வயது சிறுமி, அதே பகுதியில் உள்ள தனியார் பள்ளியில் பிளஸ்2 படித்து வருகிறார். இவரது தாயார் வெளி மாநிலத்தில் உள்ளார். இந்தநிலையில் சிறுமியின் தாயார், தனது தோழியை தொடர்பு கொண்டு தனது குடும்பத்துக்கு பணம் தேவைப்படுகிறது. எனது மகளிடம் நகையை கொடுத்து விடுகிறேன். எனக்கு பணத்தை பெற்று கொடு என கூறியதாக தெரிகிறது.

அதன்படி மாணவி 4 கிராம் நகையை எடுத்து கொண்டு இரும்புலியூரில் உள்ள தாயாரின் தோழி வீட்டுக்கு சென்றுள்ளார். அங்கு தாயாரின் தோழி இல்லாததால் அவரது கணவரான தச்சுத்தொழிலாளி சங்கர் என்பவரிடம் கொடுத்துள்ளார். அப்போது பிளஸ்2 மாணவிக்கு சங்கர் பாலியல் தொல்லை கொடுத்ததாக கூறப்படுகிறது.

அதிர்ச்சி அடைந்த மாணவி கூச்சல் போட்டு கத்தினார். அக்கம் பக்கத்தினர் ஓடி வந்து சிறுமியிடம் விசாரித்தனர். அழுதபடியே அங்கிருந்து சிறுமி வீட்டுக்கு புறப்பட்டார். வழியில் மாணவி மருந்து கடைக்கு சென்று மாத்திரைகளை வாங்கி தின்றதாக தெரிகிறது. இதையடுத்து தாம்பரம் அருகே சென்றுகொண்டிருந்த சிறுமி திடீரென சாலையில் மயங்கி விழுந்தார்.

வாகனஓட்டிகள் அவரை மீட்டு தாம்பரம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தனர். பின்னர் அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக சென்னை ராஜீவ்காந்தி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். போலீசார் மாணவி கையில் வைத்திருந்த கடிதத்தை கைப்பற்றி பார்த்தபோது தனது தாயாரின் தோழி கணவர் பாலியல் தொந்தரவு செய்தது குறித்து எழுதப்பட்டிருந்தது.

இதுகுறித்து பாதிக்கப்பட்ட மாணவியின் தாயார் வண்டலூர் அனைத்து மகளிர் போலீஸ் நிலையத்தில் புகார் செய்தார். அதன் பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து பிளஸ்2 மாணவிக்கு பாலியல் தொல்லை கொடுத்த சங்கரை கைது செய்து விசாரித்து வருகின்றனர்.

# வேலை நிறுத்தம் செய்தால் சம்பளம் கிடையாது: அரசு ஊழியர்களுக்கு தமிழக அரசு எச்சரிக்கை

சென்னை, நவ.19

பழைய ஓய்வூதிய திட்டத்தை செயல்படுத்த வேண்டும்; அரசின் பல்வேறு துறைகளில் 30 சதவீதத்திற்கு மேலாக காலியாக உள்ள பணியிடங்களை நிரப்புவதற்கு உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

கருணை அடிப்படையில் பணி நியமனத்திற்கான உச்சவரம்பு 5 சதவீதம் குறைக்கப்பட்டதை ரத்து செய்து மீண்டும் 25 சதவீதமாக வழங்க வேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகளை நிறைவேற்ற வலியுறுத்தி நவம்பர் 18ந்தேதி (நாளை) ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தம் நடத்த ஜாக்டோ ஜியோ கூட்டமைப்பு திட்டமிட்டுள்ளது.



இந்த நிலையில் நாளை வேலை நிறுத்தம் செய்தால் சம்பளம் கிடையாது என்று தமிழக அரசின் தலைமை செயலாளர் முருகானந்தம் எச்சரிக்கை விடுத்துள்ளார். நாளை தற்செயல் விடுப்பு எடுக்க அனுமதியில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எஸ்.ஐ.ஆர் பணிகளை புறக்கணித்து நாளை போராட்டத்தில் ஈடுபட உள்ளதாக வருவாய்துறை ஊழியர்களும் அறிவித்து இருந்த நிலையில், தமிழக அரசு இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளது.

# திருமணத்திற்கு முந்தைய நெருக்கம் தற்போது சர்வ சாதாரணமாக உள்ளது: ஐகோர்ட்டு கருத்து

மதுரை, நவ.19

நெல்லையை சேர்ந்த வாலிபர் கடந்த 2014ம் ஆண்டு கல்லூரியில் படிக்கும் போது இளம்பெண் ஒருவரை காதலித்து உள்ளார். அந்த சமயத்தில் தனது காதலியுடன் அவ்வப்போது உல்லாசமாக இருந்துள்ளார். இந்த நிலையில் வாலிபருக்கு வேறொரு பெண்ணுடன் திருமண நிச்சயதார்த்தம் நடந்துள்ளது இதனை அறிந்த அவரது காதலி போலீசில் புகார் அளித்துள்ளார். அந்த புகாரின் பேரில் வள்ளியூர் போலீசார் பாலியல் பலாத்காரம், மோசடி உள்ளிட்ட பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்தனர். வள்ளியூர் கோர்ட்டில் அந்த வழக்கு விசாரணை நடந்து வருகிறது. இந்த நிலையில், தன் மீதான இந்த வழக்கை ரத்து செய்யக்கோரி வாலிபர் மதுரை ஐகோர்ட்டில் மனு தாக்கல் செய்தார். இந்த மனுவை நீதிபதி புகழேந்தி விசாரித்து அளித்த தீர்ப்பு வருமாறு :



மனுதாரரும், இளம்பெண்ணும் ஏறக்குறைய 9 ஆண்டுகளாக பாலியல் உறவில் இருந்து வந்துள்ளனர். இந்த நீண்ட கால பாலியல் உறவின் போது புகார்தாரர் எதிர்ப்பு தெரிவிக்கமால் இருந்தது, இருவரின் சம்மதத்தின் அடிப்படையிலான உறவு என்பதை குறிக்கிறது. மேலும் மனுதாரர் திருமணம் செய்து கொள்வதாக உறுதியளித்ததற்கான ஆதாரங்கள் இல்லை. இருவர் தாமாக முன்வந்து நீண்ட நாளாக உடல் ரீதியான நெருக்கத்தில் ஈடுபடும்போது, அந்த உறவின் அடுத்தடுத்த முறிவு, ஏற்பட்ட பின் குற்றவியல் சட்டத்தினை பயன் படுத்துவது தவறு. இதுபோன்ற விஷயங்களை கோர்ட்டு உறுதியாகத் தீர்மானிப்பது சாத்தியமில்லை. திருமணத்திற்கு முந்தைய நெருக்கம் தற்போது சர்வ சாதாரணமாக உள்ளது.

தனிப்பட்ட நடத்தையை ஒழுங்குபடுத்தவோ அல்லது தனிப்பட்ட ஏமாற்றத்தை வழக்காக மாற்றவோ குற்றவியல் செயல்முறையைப் பயன்படுத்த முடியாது. சமீப காலமாக இது போன்ற வழக்குகளை கோர்ட்டுகள் அதிகமாக எதிர்கொண்டு வருகின்றன. அந்த வகையில் மனுதாரர் மீது நிலுவையில் உள்ள வழக்கு சட்டத்தை துஷ்பிரயோகம் செய்வதாக இருப்பதால் அதனை ரத்து செய்து உத்தரவிடப்படுகிறது' இவ்வாறு நீதிபதி உத்தரவிட்டார்.

# தர்மபுரி: சிவன் கோவில்களில் பிரதோஷ வழிபாடு

தர்மபுரி நவ.19

பிரதோஷ தினமான இன்று சிவன் கோவில்களில் நந்தி மற்றும் லிங்கத்துக்கு சிறப்பு அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றன.

இதில் அந்தந்த பகுதியைச் சேர்ந்த திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர்.





தர்மபுரி நகரில் பிரசித்தி பெற்ற கோட்டை கல்யாண காமாட்சி அம்மன் உடனாகிய மல்லிகார்ஜுன சாமி கோவிலில் பிரதோஷ சிறப்பு வழிபாடு நடைபெற்றது. இதில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர்.

இதேபோன்று தர்மபுரி நெசவாளர் நகரில் உள்ள மங்களாம்பிகை உடனாகிய மகாலிங்கேஸ்வரர் கோவிலில் பிரதோஷத்தை முன்னிட்டு நந்தி மற்றும் மகா லிங்கேஸ்வரருக்கு விபூதி, சந்தனம், பால், தயிர், பஞ்சாமிர்தம், இளநீர் உள்ளிட்ட பல்வேறு வகையான வாசனை திரவியங்களால் சிறப்பு அபிஷேகம் செய்யப்பட்டு தீபாராதனை காண்பிக்கப்பட்டது. இதில் திரளான பக்தர்கள் கலந்துகொண்டு சாமி தரிசனம் செய்தனர். பக்தர்களுக்கு சிறப்பு பிரசாதம் வழங்கப்பட்டது.

தர்மபுரி குமாரசாமிப்பேட்டை சிவகாமசுந்தரி உடனாகிய ஆனந்த நடராஜர் கோவிலில் நடைபெற்ற பிரதோஷ வழிபாட்டில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர். இதேபோல் தர்மபுரி ஆத்துமேடு சாலையில் உள்ள நஞ்சுண்டேஸ்வரர் கோவிலில் சுவாமி மற்றும் நந்திக்கு சிறப்பு அபிஷேக ஆராதனை நடைபெற்றது. இதில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர்.

இதேபோன்று தீர்த்தமலை தீர்த்தகிரீஸ்வரர் கோவில், ஒகேனக்கல் தேசநாதேஸ்வரர் கோவில், தர்மபுரி கடைவீதி அம்பிகா பரமேஸ்வரி அம்மன் உடனாகிய மருதவாணேஸ்வரர் கோவில், தர்மபுரி ஹரிஹர நாத சாமி கோவில், அன்னசாகரம் சாலையில் உள்ள சித்திலிங்கேஸ்வரர் கோவில், தீயணைப்பு நிலைய வளாகத்தில் உள்ள பிரகதாம்பாள் சமேத அருளீஸ்வரர் கோவில், அன்னசாகரம் சோமேஸ்வரர் கோவில், சவுலுப்பட்டி ஆதி லிங்கேஸ்வரர் கோவில் உள்ளிட்ட கோவில்களிலும் பிரதோஷ வழிபாடு நடைபெற்றது. இதில் அந்தந்த பகுதிகளைச் சேர்ந்த பக்தர்கள் கலந்துகொண்டு தரிசனம் செய்தனர்.

# குடியிருப்பு பகுதிக்குள் புகுந்த 'கட்டைக் கொம்பன்' காட்டு யானை நீலகிரியில் பரபரப்பு

நீலகிரி, நவ.19

நீலகிரி மாவட்டத்தில் பொதுமக்கள் வசிக்கும் குடியிருப்பு பகுதிகளுக்குள் அவ்வப்போது யானை, கரடி உள்ளிட்ட வனவிலங்குகள் நுழைந்து விடுகின்றன. அந்த வகையில் கூடலூரை அடுத்த குறிஞ்சி நகர் பகுதியில், குடியிருப்பு பகுதிக்குள் 'கட்டைக் கொம்பன்' என்று அழைக்கப்படும் ஆண் காட்டு யானை நுழைந்ததால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

இதனால் அச்சமடைந்த பொதுமக்கள் தங்கள் வீடுகளுக்குள் தஞ்சமடைந்தனர். ஊரில் இருந்த வாலிபர்கள் யானையை காட்டுப் பகுதிக்குள் விரட்ட முயன்றனர்.





இதற்கிடையில், வனத்துறையினர் இது குறித்து தகவலறிந்து சம்பவ இடத்திற்கு வந்து சேர்ந்தனர். பின்னர் நீண்ட நேர போராட்டத்திற்கு பிறகு, பட்டாசு வெடித்து யானையை காட்டுப் பகுதிக்குள் வனத்துறை அதிகாரிகள் விரட்டினர்.

# திருமணமான 2½ மாதத்தில் புதுப்பெண் 8 மாத கர்ப்பம்; கணவர் அதிர்ச்சி

கடலூர், நவ.19

குறிஞ்சிப்பாடி அருகே திருமணமான 2½ மாதத்தில் புதுப்பெண் 8 மாத கர்ப்பிணியாக இருப்பதை அறிந்து கணவர் அதிர்ச்சி அடைந்தார். கர்ப்பத்துக்கு காரணமான பெண்ணின் தாய்மாமன் மீது போலீசார் வழக்குப்பதிவு செய்தனர். கடலூர் மாவட்டம் குறிஞ்சிப்பாடி அருகே உள்ள ஒரு கிராமத்தை சோ்ந்த 18 வயது இளம் பெண்ணுக்கும், வைலாமுர் கிராமத்தை சேர்ந்த 25 வயது வாலிபருக்கும் கடந்த செப்டம்பர் மாதம் 4ந்தேதி திருமணம் நடைபெற்றது.

இந்த நிலையில் புதுப்பெண் தனக்கு வயிறு வலிப்பதாக கூறியதை அடுத்து அவரை சிகிச்சைக்காக அருகில் உள்ள அரசு மருத்துவமனைக்கு கணவர் அழைத்து சென்றார். அங்கு அவரை பரிசோதை செய்த டாக்டர்கள், புதுப்பெண் 8 மாதம் கர்ப்பமாக இருப்பதாக தெரிவித்தனர்.



இதைக்கேட்டு அதிர்ச்சி அடைந்த கணவர், தனது மனைவியின் கர்ப்பத்துக்கு காரணமானவரை கண்டுபிடித்து நடவடிக்கை எடுக்கக்கோரி நெய்வேலி அனைத்து மகளிர்போலீஸ் நிலையத்தில் புகார் கொடுத்தார். அதன் பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தியதில் புதுப்பெண்ணின் கர்ப்பத்துக்கு காரணம் அவரது தாய்மாமன் என்பது தெரியவந்தது. அதாவது புதுப்பெண்ணின் தாய்மாமன் லிங்கமுத்து(32) என்பவருக்கு அடிக்கடி வலிப்பு வரும் என்பதால் அவர் தனது அக்காள் வீட்டில் இருந்து வந்துள்ளார். அப்போது அவர் தனது அக்காள் மகளான புதுப்பெண்ணிடம் ஆசை வார்த்தை கூறி பலமுறை உல்லாசம் அனுபவித்ததும், இதனால் அவர் கர்ப்பம் அடைந்ததும் தொிய வந்தது. இதையடுத்து லிங்கமுத்து மீது போலீசார் வழக்குப்பதிவு செய்தனர். லிங்கமுத்து கடந்த 3 மாதங்களுக்கு முன்பு நெய்வேலி பகுதியில் நடந்த சாலை விபத்தில் படுகாயம் அடைந்து கோமா நிலையில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

# கார்த்திகை மாத பிரதோஷம்: தஞ்சை பெரிய கோவில் நந்திக்கு சிறப்பு அபிஷேகம்

தஞ்சை, நவ.19

தஞ்சை பெரியகோவில் உலக பிரசித்தி பெற்ற கோவிலாகும். இது தமிழர்களின் கட்டிடக் கலைக்கு எடுத்துக்காட்டாக திகழ்வதோடு உலக பாரம்பரிய சின்னமாகவும் விளங்கி வருகிறது. தஞ்சை பெரியகோவிலில் பிரதோஷ வழிபாட்டின் போது பக்தர்கள் அதிகளவில் வருகை தருவார்கள்.

இந்த நிலையில், கார்த்திகை மாத சோமவார பிரதோஷத்தை முன்னிட்டு தஞ்சை பெரிய கோவிலில் பிரதோஷ வழிபாடு நடந்தது. இதையொட்டி கோவிலில் மகாநந்தியெம்பெருமானுக்கு மஞ்சள், பால், தயிர், சந்தனம் உள்ளிட்ட பொருட்களால் அபிஷேகம் நடைபெற்றது. இதில் திரளான பக்தர்கள் கலந்துகொண்டு சாமி தரிசனம் செய்தனர்.



அதேபோல, திருவண்ணாமலை அண்ணாமலையார் கோயிலிலும் பிரதோஷ வழிபாடு நடைபெற்றது. ஆயிரங்கால் மண்டபம் அருகே அமைந்துள்ள பெரிய நந்தியம் பெருமானுக்கு பல்வேறு வகையான வாசனை திரவியங்களைக் கொண்டு சிறப்பு அபிஷேக ஆராதனை நடைபெற்றது.

ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர். மேலும், தமிழகத்தில் பல்வேறு பகுதிகளில் உள்ள சிவன் கோவில்களிலும் பிரதோஷ வழிபாடு நடைபெற்றது.

தினகனி
NAMADHU DHINA KANI DAILY MORNING NEWSPAPER
PRESS REGISTER GENERAL OF INDIA
PRGI NO TNTAM/2023/88253
19.11.2025

# கார்த்திகை சோமவார விழா.. திருவரங்குளம் அரங்குலநாதர் கோவிலில் 1008 சங்காபிஷேகம்

புதுக்கோட்டை மாவட்டம், திருவரங்குளத்தில் பிரசித்தி பெற்ற ஸ்ரீ அரங்குலநாதர் பெரியநாயகி அம்பாள் திருக்கோவில் உள்ளது. இந்தக் கோவிலில் கார்த்திகை சோமவார விழா சிறப்பாக நடைபெறுவது வழக்கம். அவ்வகையில் இந்த ஆண்டு கார்த்திகை சோமவார விழா இன்று நடைபெற்றது.

சோமவார விழாவை முன்னிட்டு கோவில் வசந்த மண்டபத்தில் சுவாமிமற்றும்அம்பாளை எழுந்தருளச் செய்தனர். பின்னர், சிவாச்சாரியார்கள் யாக பூஜை செய்து, லிங்க வடிவில் நெல் தானியத்தை பரப்பி, அதில் 1008 சங்குகளை அடுக்கி புனித நீரை நிரப்பி, வேத மந்திரங்கள் முழங்க சிறப்பு பூஜைகள் செய்தனர்.

பூஜைக்கு பின்னர் சங்குகளில் உள்ள புனித நீரை எடுத்துச் சென்று மூலஸ்தானத்தில் உள்ள சுயம்புலிங்க சிவபெருமான், பெரியநாயகி அம்பாளுக்கு சிறப்பு அபிஷேகம் செய்தனர். இந்த சிறப்பு வழிபாட்டில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு தரிசனம் செய்தனர்.

பூஜை நிறைவுபெற்றதும் கருப்பு சாமி திருமண மண்டபத்தில் கத்தக்குறிச்சி கண்டு வார் மண்டகப்படிதாரர்கள் சார்பில் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

# பொய்கை அணையில் இருந்து 16 நாட்களுக்கு தண்ணீர் திறந்துவிட தமிழக அரசு உத்தரவு

கன்னியாகுமரி, நவ.19

பொய்கை அணையில் இருந்து 16 நாட்களுக்கு தண்ணீர் திறந்துவிட தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது;

"கன்னியாகுமரி மாவட்டம், தோவாளை வட்டம், ஆரல்வாய்மொழி கிராமத்தில் அமைந்துள்ள பொய்கை அணையிலிருந்து, கன்னியாகுமரி மாவட்டம், தோவாளை வட்டம் மற்றும் திருநெல்வேலி மாவட்டம் இராதாபுரம் வட்ட பாசன நிலங்களுக்கு 18.11.2025 முதல் 03.12.2025 வரை 16 நாட்களுக்கு வினாடிக்கு 30 கன அடி வீதம் தண்ணீர் இருப்பை பொறுத்து தண்ணீர் திறந்துவிட அனுமதி அளித்து அரசு ஆணையிட்டுள்ளது.

இதன் மூலம் கன்னியாகுமரி மாவட்டம், தோவாளை வட்டம் மற்றும் திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டங்களில் உள்ள ஆரல்வாய்மொழி, குமாரபுரம் மற்றும் பழவூர் கிராமங்களில் உள்ள 450.24 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும்."

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் (19.11.2025)

**மேஷம்** புதிய முயற்சிகள் வெற்றியடையும் நாள். நண்பர்களிடம் இருந்து ஆதரவு கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் சிறிய லாபம் உண்டு.

**ரிஷபம்** உழைப்புக்குஉரிய பலன்கிடைக்கும் நாள். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். செலவுகள்கட்டுப்பாட்டில் இருக்கும்.

**மிதுனம்** சில எதிர்பாராத தடை ஏற்பட்டாலும் அதைக் கடந்து முன்னேறுவீர்கள். நண்பர்கள் உங்களை ஊக்குவிப்பர்.

**கடகம்** வீட்டு வேலைகளில் அதிக ஈடுபாடு. உடல் சோர்வு இருந்தாலும் மனநிம்மதி உண்டு. புதிய உறவு உருவாக வாய்ப்பு.

**சிம்மம்** தன்னம்பிக்கையுடன் செயல்படுங்கள், சாதனை உங்கள் பக்கம். அதிகாரிகளின் பாராட்டு கிடைக்கும்.

**கன்னி** நீண்டநாள் ஆசைகள் நிறைவேறும் நாள். சொத்து சம்பந்தமான விவகாரத்தில் நல்ல முடிவு.

**துலாம்** புதிய வாய்ப்புகள் வரலாம். அதிர்ஷ்டம் உங்களுடன் இருக்கும். நண்பர்கள் நம்பிக்கையுடன் நடப்பர்.

**விருச்சிகம்** உடல்நலம் கவனிக்க வேண்டிய நாள். உறவினர்களிடம் நிதானமாக பேசுங்கள். பொறுமைதேவை.

**தனுசு** வெளிநாட்டுச் செய்தி உங்களை மகிழ்விக்கும். கல்வியில் முன்னேற்றம். தொழிலில் புதிய வாய்ப்பு.

**மகரம்** அழுத்தமான பணி இருந்தாலும் மனநிம்மதி உண்டு. குடும்பத்தில் நல்ல செய்தி கேட்பீர்கள்.

**கும்பம்** புதிய முயற்சி தொடங்க சிறந்த நாள். தொழிலில் முன்னேற்றம் உண்டு. எதிரிகள் விலகுவர்.

**மீனம்** மன அமைதி பெறுவீர்கள். உறவினர்கள் மதிப்புடன் நடப்பர். நீண்டநாள் குழப்பம் தீரும்.

# டெல்லி குண்டு வெடிப்பு: 25 இடங்களில் அமலாக்கத்துறை சோதனை




புதுடெல்லி, நவ.19

டெல்லி செங்கோட்டை அருகேவுள்ள லால் கிலா மெட்ரோ ரயில் நிலையத்தின் அருகே கடந்த 10 ஆம் தேதி மாலை கடும் நெரிசலுக்கு மத்தியில் கார் ஒன்று வெடித்துச் சிதறிய சம்பவத்தில் 15 பேர் பலியாகினர். 20 க்கும் மேற்பட்டோர் காயங்களுடன் மருத்துவமனையில் சிகிச்சைப் பெற்று வருகின்றனர். .இந்தச் சம்பவத்தை பயங்கரவாதத் தாக்குதல் என தேசிய புலனாய்வு முகமை உறுதிப்படுத்தியுள்ள நிலையில், இதில் தொடர்புடையவர்கள் மற்றும் அவர்கள் படித்த பல்கலைக்கழகமான அல்ஃபலா பல்கலைக்கழகத்திலும் சோதனையைத் தீவிரப்படுத்தியுள்ளனர்.

இந்த நிலையில், ஹரியானாவின் பரிதாபாத்தில் அமைந்துள்ள அல்பலா பல்கலைக்கழகத்தின் தலைமையிடம் தில்லி மற்றும் பரிதாபாத்தில் உள்ள 24 இடங்களில் அமலாக்கத்துறையினர் இன்று காலைமுதலே சோதனை நடத்தி வருகின்றனர். மேலும், இதில் சம்பந்தப்பட்ட நபர்களிடமும் அமலாக்கத்துறை அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர். விசாரணை தொடர்பான தகவல்கள் விரைவில் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

முன்னதாக, இந்தப் பயங்கரவாதத் தாக்குதலில் தொடர்புடைய அல்பலா பல்கலைக்கழக துணைவேந்தர் ஜாவத் அகமது சித்திகியின் தம்பி மஹ்மூத் அஹ்மத் சித்திகி (வயது 50) மத்திய பிரதேச போலீசாரால் நேற்று கைது செய்யப்பட்டார். இருப்பினும், அவர் பயங்கரவாதத் தாக்குதல் தொடர்பான வழக்கில் கைது செய்யப்படவில்லை என்றும், 25 ஆண்டுகளுக்கு முன்பு பல்வேறு மோசடிகளில் ஈடுபட்ட வழக்கில் கைது செய்யப்பட்டுள்ளதாக போலீஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

# கார்த்திகை மாத பிறப்பு: பழனி மலைக்கோவிலில் சிறப்பு வழிபாடு

திண்டுக்கல் நவ.19

உலக பிரசித்தி பெற்ற பழனி முருகன் கோவிலில் தரிசனம் செய்ய தினமும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் வருகின்றனர். தமிழ்மாத பிறப்பு, கிருத்திகை நாட்களில் வெளியூர், வெளிமாநில பக்தர்கள் திரளாக வந்து தரிசனம் செய்கின்றனர். அதன்படி இன்று கார்த்திகை மாதப் பிறப்பு என்பதால் பழனி முருகன் கோவிலில் சிறப்பு வழிபாடு நடைபெற்றது. மேலும் கார்த்திகை மாதப்பிறப்பு என்பதால் அய்யப்ப பக்தர்கள், பழனி முருகன் கோவிலுக்கு வந்து சாமி தரிசனம் செய்தனர். அதோடு பழனி அடிவாரம் பாதவிநாயகர் கோவில், திருஆவினன்குடி கோவில், அய்யப்பன் கோவில் ஆகிய இடங்களில் அய்யப்ப பக்தர்கள் துளசி மாலை அணிந்து விரதத்தை தொடங்கினர். பழனி முருகன் கோவிலில் உள்ள ஆனந்த விநாயகர் சன்னதியில் தமிழ் மாதப்பிறப்பையொட்டி சிறப்பு யாகம், பூஜைகள் நடைபெறுவது வழக்கம்.அதன்படி கார்த்திகைமாதப்பிறப்பையொட்டி இன்று சிறப்பு யாகம், பூஜைகள் நடைபெற்றன. தொடர்ந்து சுவாமிக்கு சிறப்பு அபிஷேகம், வெள்ளிக்கவச அலங்காரம் செய்யப்பட்டு மகா தீபாராதனை காட்டப்பட்டது. இதில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர்.

# அமெரிக்காவிடம் இருந்து சமையல் கியாஸ் வாங்க ஒப்பந்தம்: வர்த்தகத்துறை செயலாளர் தகவல்




புதுடெல்லி, நவ.19

அமெரிக்க ஜனாதிபதியாக டிரம்ப் பதவியேற்றதை தொடர்ந்து இந்தியா மீது 25 சதவீதம் இறக்குமதி வரி விதிக்கப்பட்டது. ரஷியாவிடம் இருந்து கச்சா எண்ணெய் வாங்குவதாக கூறி மேலும் 25 சதவீதம் என 50 சதவீதம் வரிவிதிக்கப்பட்டது. இந்த வரிவிதிப்பை குறைக்க இரு தரப்பினர் இடையே தொடர்ந்து வர்த்தக ஒப்பந்த பேச்சுவார்த்தை நடந்து வருகிறது.

இந்தநிலையில் இந்தியாஅமெரிக்கா இருதரப்பு வர்த்தக ஒப்பந்தத்தின் முதற்கட்ட பேச்சுவார்த்தை முடிவடையும் நிலையில் உள்ளதாகவும், இந்தாண்டு இறுதிக்குள் ஒப்பந்தம் உறுதிப்படுத்தப்படும் என வர்த்தகத்துறை செயலாளர் ராஜேஷ் அகர்வால் தெரிவித்துள்ளார். அவர் கூறுகையில், "இருதரப்பு வர்த்தக ஒப்பந்தத்தின் முதல்கட்டம் முடிவடையும் நிலையில் உள்ளது. இதன்மூலம் 50 சதவீத வரிவிதிப்புக்கு தீர்வு காணப்படும்" என்றார்.

2026ம் ஆண்டில் அமெரிக்காவில் இருந்து சமையல் எரிவாயு இறக்குமதி செய்யவும் இந்திய எண்ணெய் நிறுவனங்கள் ஓர் ஆண்டு ஒப்பந்தத்தில் கையெழுத்திட உள்ளன. இதுகுறித்து அவர், "இது நீண்டகாலமாக பேச்சுவார்த்தையில் உள்ள ஒன்று. இது இருதரப்பு வர்த்தக உறவுக்கான பகுதியாக இல்லை. இருப்பினும் இருநாடுகளிடையேயான வர்த்தக உறவை சமப்படுத்த நமது முயற்சியின் ஒரு பகுதி" என்றார்.

## மகுடம் படத்தின் மேக்கிங் வீடியோவை வெளியிட்ட விஷால்




தமிழ் சினிமாவின் முன்னணி நடிகர்களில் ஒருவர் விஷால். இவர் தற்போது 'மகுடம்' படத்தில் நடித்து வருகிறார். இதில் கதாநாயகியாக துஷாரா விஜயன் நடிக்கிறார். மேலும் நடிகை அஞ்சலி முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கிறார்.

ரவி அரசு இயக்கத்தில் தொடங்கப்பட்ட 'மகுடம்' படப்பிடிப்பில் மோதல் ஏற்பட்டதால், இப்படத்தினை விஷாலே இயக்கி வருகிறார். இது தொடர்பான அதிகாரப்பூர்வ அறிவிப்பினை தீபாவளி அன்று விஷால் வெளியிட்டார். கதை மட்டுமே ரவி அரசு எனவும், திரைக்கதை, வசனம் மற்றும் இயக்கம் விஷால் எனவும் படத்தின் போஸ்டரில் குறிப்பிடப்பட்டு இருந்தது.

இப்படத்தின் இறுதிக்கட்ட படப்பிடிப்பு பணிகள் இறுதி கட்டத்தை எட்டியுள்ள நிலையில் இப்படத்தின் கிளைமேக்ஸ் காட்சிகள் சமீபத்தில் எடுக்கப்பட்டன. அதாவது, தொடர்ந்து 17 இரவுகள் இந்த படத்தின் கிளைமேக்ஸ் காட்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. இந்த நிலையில், நடிகர் விஷால் மகுடம் படத்தின் கிளைமேக்ஸ் காட்சியின் மேக்கிங் வீடியோவை வெளியிட்டுள்ளார்.

## உதவி இயக்குநருக்கு கார் பரிசளித்த நடிகர் பிரதீப் ரங்கநாதன்



"கோமாளி" படத்தின் மூலம் தமிழ் சினிமாவில் இயக்குநராக அறிமுகமானவர் பிரதீப் ரங்கநாதன். அதன்பிறகு "லவ் டுடே' என்ற படத்தை இயக்கி நடித்து வரவேற்பை பெற்றார். எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல் வந்த இந்தப் படம் ரூ.100 கோடி வசூலித்தது.அதன்பிறகு, "டிராகன், டியூட்" போன்றபடங்களில் நடித்து அடுத்தடுத்து ரூ.100 கோடி வசூலை கொடுத்து கவனத்தை பெற்றார்.

இந்த நிலையில், நடிகர் பிரதீப் ரங்கநாதன் தன்னுடைய நண்பரும், லவ் டுடே படத்தில் உதவி இயக்குநருமாக பணியாற்றிய ரமேஷ்க்கு பரிசாக கார்வாங்கிக் கொடுத்துள்ளார். இது மட்டும் இல்லாமல், காரைக் கொடுக்கும்போது, " சிறப்பான வேலை செய்து வருகிறீர்கள். உங்களது விஸ்வாசத்துக்கு எனது சிறிய அன்புப் பரிசு. இது தொடக்கம் தான். நாம் இன்னும் நீண்ட தூரம் செல்ல வேண்டி இருக்கு. ரொம்பவும் நன்றி, லவ் யூ" என்று சொல்லி ஒரு முத்தமும் கொடுத்து காரை அன்பளிப்பாக கொடுத்துள்ளார் பிரதீப் ரங்கநாதன்.

காரை பரிசாக பெற்ற இயக்குநர் ரமேஷ் தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் வீடியோ ஒன்றை பகிர்ந்துள்ளார். அதில், "என்னுடைய முதல் கார். என்னுடைய நண்பனிடமிருந்து...வெறும் பரிசு அல்ல, நம்பிக்கை மற்றும் நாங்கள் பகிர்ந்து கொண்ட பயணத்தின் சின்னம். இந்த அழகான நினைவுக்கும், எப்போதும் என்னை நம்பியதற்கும் நன்றி . இந்த தருணம் எப்போதும் பயணத்தையும் நாங்கள் கட்டியெழுப்பிய பிணைப்பையும் எனக்கு நினைவூட்டும். இது காரை விடவும் நீடிக்கும் ஒரு நினைவு." என்று பதிவிட்டுள்ளார்.

## வாரணாசி பட டைட்டில் கார்டில் மகேஷ் பாபு பெயர் இல்லாதது ஏன் தெரியுமா?




ராஜமவுலி மகேஷ் பாபு கூட்டணியில் உருவாகும் படத்திற்கு 'வாரணாசி' என டைட்டில் அறிவிக்கபட்டது. இதுதொடர்பாக வெளியிடப்பட்ட அறிமுக டீசரில் காளை ஒன்றின் மீது மகேஷ் பாபு, கையில் திரிசூலத்தை ஏந்தி வருவது போன்ற காட்சி இடம்பெற்றுள்ளது. 'ருத்ரா' என்ற கதாபாத்திரத்தில் மகேஷ் பாபு நடிக்கிறார்.

'மந்தாகினி' என்ற கதாபாத்திரத்தில் பிரியங்கா சோப்ரா, 'கும்பா' என்ற கதாபாத்திரத்தில் பிரித்விராஜ் நடித்து வருகின்றனர். இப்படத்தின் டைட்டில் , பர்ஸ்ட் லுக் போஸ்டர் வெளியீட்டு நிகழ்வு ஐதராபாத்தில் உள்ள ராமோஜி பிலிம் சிட்டியில் சமீபத்தில் நடைபெற்றது. இப்படத்தின் டைட்டில் டீசர் அண்மையில் வெளியாகி சிறந்த வரவேற்பைப் பெற்றது.

இந்த நிலையில், டைட்டில் வெளியீட்டு விழாவில் டைட்டில் கார்டில் கதாநாயகன் மகேஷ், பிரியங்கா சோப்ரா, பிரித்விராஜ் ஆகியோரின் பெயர்கள் இடம் பெறாமல் இருந்தன. இதற்கு நடிகர் மகேஷ் பாபு ரசிகர்கள் ராஜமவுலி ஏன் இப்படி செய்தார் டைட்டில் கார்டில் ஹீரோ ஹீரோயின் பெயர்களை போடுறதுதானே வழக்கம் என்று கேள்வி எழுப்பி வருகின்றனர்.

ஆனால், இதுதான் இயக்குனர் ராஜமவுலியின் ஸ்டைல். அவருடைய படத்தில் ஒரு புது உலகத்தையே பார்க்கலாம். அவரை பொறுத்தவரை ரசிகர்களுக்கு படத்தில் இருக்கும் கேரக்டர்கள்தான் நினைவில் இருக்கவேண்டும். அதைதவிர்த்து படத்தில் நடித்திருக்கும் செலிபிரிட்டி யார் என்று நினைவில் இருக்க வேண்டிய அவசியமில்லை. அதனால்தான் போஸ்டர், இன்ட்ரோ சீன்ஸ்களில் நடிகர்களின் பெயரை போடுவதை அவர் தவிர்க்கிறார் என்று கூறப்படுகிறது.

## பாகிஸ்தானில் இருந்து தாயகம் திரும்பும் இலங்கை கேப்டன் அசலங்கா




பாகிஸ்தானில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு விளையாடி வரும் இலங்கை கிரிக்கெட் அணி ஒரு நாள் தொடரை 03 என்ற கணக்கில் இழந்தது. அடுத்ததாக இன்று தொடங்கும் முத்தரப்பு 20 ஓவர் தொடரில் பங்கேற்கிறது. இதில் 3வது அணியாக ஜிம்பாப்வே களம் காணுகிறது. முதல் ஆட்டத்தில் பாகிஸ்தான் ஜிம்பாப்வே அணிகள் ராவல்பிண்டியில் இன்று மோதுகின்றன.

இதற்கிடையே, இஸ்லாமாபாத் கோர்ட்டு வளாகத்தில் தற்கொலைப்படை தாக்குதலால் அச்சமடைந்த இலங்கை வீரர்களில் பெரும்பாலானோர் தாயகம் திரும்ப விரும்பினர். ஆனால் பாகிஸ்தான் அரசு முழுமையான பாதுகாப்பு அளிக்க உத்தரவாதம் அளித்திருப்பதால், தொடர்ந்து போட்டிகளில் விளையாட வேண்டும். அதையும் மீறி நாடு திரும்பினால் நடவடிக்கை எடுக்கப்படும் என இலங்கை கிரிக்கெட் வாரியம் எச்சரித்தது.

இந்த நிலையில் இலங்கை கேப்டன் சாரித் அசலங்கா, வேகப்பந்து வீச்சாளர் அசிதா பெர்னாண்டோ ஆகியோர் உடல்நலக்குறைவால் தாயகம் திரும்ப இருப்பதாக இலங்கை கிரிக்கெட் வாரியம் அறிவித்துள்ளது. ஆனால் எந்த மாதிரியான பாதிப்பு என்பது குறித்து எதுவும் தெரிவிக்கப்படவில்லை. அசலங்காவுக்கு பதிலாக தசுன் ஷனகா இலங்கை அணியை வழிநடத்த உள்ளார்.

## உலக துப்பாக்கி சுடுதல்: வெள்ளிப் பதக்கம் வென்ற இந்திய வீரர்



உலக துப்பாக்கி சுடுதல் சாம்பியன்ஷிப் போட்டி எகிப்து தலைநகர் கெய்ரோவில் நடந்து வந்தது. இதில் நேற்று நடந்த ஆண்களுக்கான 25 மீட்டர் சென்டர் பயர் பிஸ்டல் பந்தயத்தில் இந்திய வீரர் குர்பிரீத் சிங் மயிரிழையில் தங்கப்பதக்கத்தை தவறவிட்டு வெள்ளிப்பதக்கத்துடன் திருப்தி கண்டார். குர்பிரீத் சிங், உக்ரைன் வீரர் பாவ்லோ கொரோஸ்டிலோவ் தலா 584 புள்ளிகளை குவித்தனர். 10 புள்ளி இலக்கின் உள்பகுதியில் நெருக்கமாக சுட்டதன் அடிப்படையில் பாவ்லோ தங்கப்பதக்கத்தை தட்டிச் சென்றார். பிரான்ஸ் வீரர் யான் பியரி லூயிஸ் (583 புள்ளி) வெண்கலப்பதக்கம் வென்றார். பஞ்சாப்பை சேர்ந்த 37 வயதான குர்பிரீத் சிங் உலக சாம்பியன்ஷிப்பில் வென்ற 2வது பதக்கம் இதுவாகும். 2018ம் ஆண்டிலும் வெள்ளி வென்று இருந்தார்.

இந்த போட்டியின் முடிவில் இந்தியா 3 தங்கம், 6 வெள்ளி, 4 வெண்கலம் என 13 பதக்கங்களுடன் 3வது இடம் பெற்றது. சீனா 12 தங்கம் உள்பட 21 பதக்கங்களுடன் முதலிடமும், தென்கொரியா 7 தங்கம் உள்பட 14 பதக்கங்களுடன் 2வது இடமும் பிடித்தன.

## கொல்கத்தா டெஸ்டில் படுதோல்வி: பயிற்சியாளர் கம்பீருக்கு கங்குலி அறிவுரை

கொல்கத்தா ஈடன்கார்டனில் நடந்த தென் ஆப்பிரிக்காவுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட்டில் இந்திய அணி 30 ரன்கள் வித்தியாசத்தில் 3வது நாளிலேயே படுதோல்வி அடைந்தது. 124 ரன் இலக்கை கூட துரத்தமுடியாமல் இந்திய அணி 35 ஓவர்களில் வெறும் 93 ரன்னில் சுருண்டது. பொதுவாக இந்திய ஆடுகளங்களில் (பிட்ச்) 4வது நாளில் இருந்து தான் சுழலுக்கு ஒத்துழைக்கும். ஆனால் இந்த ஆடுகளத்தில் தொடக்க நாளிலேயே சுழற்பந்து வீச்சின் கை ஓங்கியது. அதுவும் 2வது நாளில் பந்து தாறுமாறாக சுழன்று திரும்பியதால் பேட்ஸ்மேன்கள் திண்டாடி போனார்கள்.

ஆனால் இத்தகைய ஆடுகளத்தை கேட்டது நாங்கள் தான். இது ஒன்றும் விளையாட முடியாத அளவுக்கு மோசமான ஆடுகளம் கிடையாது. பேட்ஸ்மேன்கள் தடுப்பாட்டத்தில் நன்றாக செயல்பட்டு இருந்தால் வெற்றி பெற்றிருக்கலாம் என இந்திய அணியின் தலைமை பயிற்சியாளர் கவுதம் கம்பீர் தெரிவித்து இருந்தார்.

இந்த நிலையில் பெங்கால் கிரிக்கெட் சங்க தலைவரும், இந்திய அணியின் முன்னாள் கேப்டனுமான சவுரவ் கங்குலி கொல்கத்தா ஆடுகளம் மீதான விமர்சனங்களுக்கு விளக்கம் அளித்துள்ளார். அவர் அளித்த ஒரு பேட்டியில் கூறியதாவது,

இங்கு எந்த சர்ச்சையும் இல்லை. இது, டெஸ்ட் கிரிக்கெட்டுக்குரிய சிறந்த ஆடுகளமாக இல்லை தான். ஆனால் துரதிர்ஷ்டவசமாக இந்தியா தோற்று விட்டது. 124 ரன் இலக்கை 'சேசிங்' செய்திருக்க வேண்டும். கவுதம்கம்பீர்தான்இப்படிப்பட்ட ஆடுகளத்தைவிரும்பினார்.அதன்அடிப்படையில்பிட்ச்பராமரிப்பாளருக்கு சில அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டது என்பது உண்மை தான். கம்பீருடன் எனக்கு மிகுந்த நட்புறவு உண்டு. இந்தியாவுக்காக 2011ம் ஆண்டு உலகக் கோப்பை மற்றும் டி20 உலகக் கோப்பை போட்டிகளில் சிறப்பாக செயல்பட்டுள்ளார். அந்த பணியை இப்போது பயிற்சியாளராக தொடருகிறார். ஆனால் சொந்த மண்ணில் நல்ல ஆடுகளங்களில் விளையாட வேண்டும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். வேகப்பந்து வீச்சாளர்கள் ஜஸ்பிரித் பும்ரா, முகமது சிராஜ், முகமது ஷமி மீது நம்பிக்கை வைக்க வேண்டும். டெஸ்ட் அணியில் இடம் பெறுவதற்கு ஷமி தகுதியானவர். ஷமியும், சுழற்பந்து வீச்சாளர்களும் அவருக்கு டெஸ்டில் வெற்றியை தேடித் தருவார்கள். சிறந்த ஆடுகளங்களில் விளையாட வேண்டியது முக்கியம். இதை கம்பீர் புரிந்து கொள்வார் என நம்புகிறேன். பேட்டிங்கில் 350400 ரன்கள் எடுக்காவிட்டால் வெற்றி பெற முடியாது. முதலில் தங்களது வீரர்கள் மீது நம்பிக்கை வைக்க வேண்டும். மூன்று நாட்களில் போட்டிகளை முடிக்க நினைக்காமல் 5 நாட்கள் விளையாடி வெற்றி பெற வேண்டும். இவ்வாறு கங்குலி கூறினார்.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, Kil-paukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.